ஜெர்மனியிலுள்ள ஸாதிக் பள்ளிவாயில் திறப்பு விழாவில் விருந்தினர்களுக்கு ஹுஸூர் அன்வர் அவர்கள் ஆற்றிய உரை பக்கம் 3

ஜல்ஸா ஸாலானாவின் முக்கியத்துவம், நோக்கங்கள், குறிக்கோள்கள் மற்றும் அதன் அருள்கள் பக்கம் 7

உலக சக்திகளை அமைதியின் பக்கம் வழிநடத்துவதில் கலீஃபாக்கள் மேற்கொண்ட முயற்சிகள் (தொடர்ச்சி...) பக்கம் 13

காதியானும் அதன் புனித, வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களும் (தொடர்-9) பக்கம் 19



மாத இதழ்


# நுபுவ்வத் வழி


www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | November 2023 | Vol. 2 - Issue No. 12



Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 96297 46340






# திருக்குர்ஆன்

وَّ اَنَّ الْمَسٰجِدَ لِلّٰهِ فَلَا تَدْعُوْا مَعَ اللّٰهِ اَحَدًا ۙ

يٰبَنِىْۤ اٰدَمَ خُذُوْا زِيْنَتَكُمْ عِنْدَ كُلِّ مَسْجِدٍ
وَّكُلُوْا وَاشْرَبُوْا وَلَا تُسْرِفُوْا ۚ
اِنَّهٗ لَا يُحِبُّ الْمُسْرِفِيْنَ ۠

வணங்குமிடங்கள் (எல்லாம்) அல்லாஹ்விற்கே உரியவையாகும். எனவே நீங்கள் அல்லாஹ்வையன்றி வேறெவரையும் அழைக்காதீர்கள். (72:19)

ஆதமின் மக்களே! ஒவ்வொரு பள்ளிவாயிலிலும் நீங்கள் உங்கள் அழகை மேற்கொள்ளுங்கள். மேலும் உண்ணுங்கள்; பருகுங்கள். வீண் விரயம் செய்யாதீர்கள். ஏனென்றால் அவன் வீண் விரயம் செய்பவர்களை நேசிப்பதில்லை. (7:32)



# ஹதீஸ்

عَنْ مَحْمُودِ بْنِ لَبِيدٍ، أَنَّ عُثْمَانَ بْنَ عَفَّانَ،
أَرَادَ بِنَاءَ الْمَسْجِدِ، فَكَرِهَ النَّاسُ ذَلِكَ،
وَأَحَبُّوا أَنْ يَدَعَهُ عَلَى هَيْئَتِهِ، فَقَالَ
سَمِعْتُ رَسُولَ اللهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ ،
يَقُولُ مَنْ بَنَى مَسْجِدًا لِلَّهِ، بَنَى اللَّهُ لَهُ
فِي الْجَنَّةِ مِثْلَهُ

மஹ்மூது பின் லபீத் அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்ஃபான் (ரலி) அவர்கள் மஸ்ஜிது நபவியை விரிவாக்க எண்ணியபோது மக்கள் அதை தவறாகக் கருதினர். மேலும் அதனை அதன் அசல் நிலையிலேயே விட்டு விட விரும்பினர். அதற்கு அன்னார் கூறினார்கள்: ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறக் கேட்டுள்ளேன். அதாவது எவர் அல்லாஹ்வுக்காக பள்ளிவாயில் கட்டினாரோ அவருக்காக அல்லாஹ் அதே போன்ற வீட்டை சுவர்க்கத்தில் கட்டுவான். (முஸ்லிம்)






ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் 30, ஆகஸ்டு 2023 அன்று ஜெர்மனியின் கார்பனிலுள்ள ஸாதிக் பள்ளிவாசலைத் திறந்து வைத்த பிறகு விருந்தினர்களுக்கு ஆற்றிய உரை

**தமிழாக்கம்: இப்னு வஸீம்**

கண்ணியத்திற்குரியவர்களே!

அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்துஹு.

ஒரு நீண்ட கால தடைக்குப் பிறகு, கடைசியில், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு இந்த நகரத்தில் ஒரு சிறிய பள்ளிவாசல் கட்டுவதற்கான நல்வாய்ப்பு கிடைத்ததற்கு அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். இதற்காக நகரத்தின் மேயர், கவுன்ஸிலர் மற்றும் நகர வாழ் மக்கள் என எவர்கள் எல்லாம் நமது இந்தப் பள்ளிவாசலைக் கட்டுவதை சாத்தியமாக்குவதில் நமக்கு உதவினார்களோ அந்த அனைவருக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நன்றி செலுத்துதல் என்பது வெறும் வாயளவிலான நன்றி தெரிவித்தல் அல்ல. மாறாக, இது எங்களுடைய ஒரு மார்க்கக் கடமையாகும். இது இஸ்லாத்தின் கட்டளையாகும். இஸ்லாத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நீங்கள் மக்களுக்கு நன்றி செலுத்துவதில்லை என்றால், அல்லாஹ்வுக்கும் நன்றி செலுத்துவதில்லை. எனவே, இந்த வகையில், இந்தப் பணியில் எங்களுக்கு உதவிய உங்கள் அனைவருக்கும் நன்றி செலுத்துவது எங்களுடைய ஒரு மார்க்கக் கடமையும் ஆகும். மேலும், இன்று அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு இந்த நகரத்தில் ஒரு சிறிய அழகிய பள்ளிவாசல் கிடைத்து விட்டது.

ஜெர்மனி ஜமாஅத்தின் அமீர் அப்துல்லாஹ் சாஹிப் அவர்கள் இந்த நகரத்தின் வரலாற்றை எடுத்துரைத்தவாறு கூறியுள்ளார்கள்:

பள்ளிவாசல் நகரத்துக்கு நடுவில் அமைந்துள்ளது. மேலும், இது மிகவும் நல்ல ஒரு விஷயமாகும். ஏனென்றால், நகரத்தில் உலக, பௌதிக பொருள்கள் கிடைக்கச் செய்யப்படும் அதே வேளையில், நடு இடத்தில் மார்க்கப் போதனைகளின்படி செயல்படுபவர்களுக்காகவும் ஓர் இடம் இருக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் அந்த இடத்தில் ஒன்றுகூடி தம் இறைவனை வணங்க முடியும். இங்கு பள்ளிவாசலும் இருக்க வேண்டும்; தேவாலயமும் இருக்க வேண்டும். மற்ற மதங்களுடைய வழிபாட்டுத் தலங்களும் இருக்கலாம்; இருக்கவும் வேண்டும். இந்த அனைத்தும் ஒன்றாக இருக்கும்போது, மார்க்கம், ஒருவர் மற்றவருடன் இணைந்து அமர்ந்து, ஒத்துழைத்து வாழுமாறு போதிக்கிறது என்பது தெரியவரும்.

எந்த ஒரு மதமும், எந்தவொரு மதத்தின் தோற்றுநரும் பயங்கரவாதத்தைப் போதிக்கவில்லை; குழப்பம் விளைவிக்க போதிக்கவில்லை. எங்களுடைய நம்பிக்கையின்படி, எல்லா இறைத்தூதர்களும் இறைவன் தரப்பிலிருந்து வந்தார்கள். இறைவன் அவர்களுக்கு இவ்வாறு போதனையை வழங்கி அனுப்பினான்:

நீங்கள் இறைவனை வணங்குவதன் பக்கம் மக்களுக்கு கவனமூட்டுங்கள். மேலும், ஒருவர் மற்றவருக்கான உரிமையை செலுத்துவதன் பக்கம் கவனமூட்டுங்கள். அமைதி, அன்பு, நேசம் மற்றும் சகோதரத்துவத்தை ஊக்குவிப்பதன் பக்கம் கவனமூட்டுங்கள்.

எனவே, இந்த வகையில், இங்கு எங்களுக்கு இப்படிப்பட்ட ஓர் இடத்தில் பள்ளிவாசல் கிடைத்தது ஒரு நல்ல விஷயமாகும். இங்கிருந்து நாங்கள் தலைமையகத்தில் இருந்தவாறு, எங்களுடைய சுற்று வட்டாரத்தின் சூழலில், இஸ்லாத்தின் உண்மையான போதனைகள் பற்றி எங்களால் மக்களுக்கு எடுத்துக் கூற முடியும்.

தவறான வகை முஸ்லிம்கள் இஸ்லாம் தொடர்பாக தவறான கண்ணோட்டத்தை உருவாக்கி விட்டார்கள். மேலும், துர்பாக்கியத்தால் பெரும்பான்மையினர் இந்தத் தவறான கண்ணோட்டத்தைக் கொண்ட போதனையின்படி செயல்படுகின்றனர். அதை நீக்கக் கூடியவர்களாக நாங்கள் திகழ்வோம்.

திருக்குர்ஆன், ஹஸ்ரத் முஹம்மத் முஸ்த.ஃ.பா (ஸல்) அவர்களின் நடைமுறைகளால் இஸ்லாத்தின் உண்மையான போதனையோ அமைதி, அன்பு, நேசம் மற்றும் சமாதானத்-திற்கான போதனையாகும் என்பதை எடுத்துக் கூறுவோம்.

நம் அமீர் சாஹிப் அவர்கள் கூறியது போன்று, பள்ளிவாசல் கட்டுவதற்கு சில மக்கள் ஆரம்பத்தில் எதிர்ப்பும் தெரிவித்தார்கள். மேலும், அந்த மக்களுடைய இந்த எதிர்ப்பு ஓரளவு ஆகுமானதாகவும் இருக்கலாம்.

ஏனென்றால், நான் முன்னர் கூறினேன், அந்த மக்கள் முஸ்லிம்களின் நடைமுறையைப் பார்த்தார்கள். முஸ்லிம்களிடம் பயங்கரவாதம் காணப்படுகிறது என்பதை அந்த மக்கள் பார்த்தார்கள். முஸ்லிம்களின் பெரும்பாலான நாடுகளில் ஒருவர் மற்றவருடைய உரிமைகள் செலுத்தப்படுவதில்லை என்பதை அவர்கள் பார்த்தார்கள்.

எனவே, இந்தக் காரணத்தினால், அவர்களுக்கு ஆட்சேபனை ஏற்பட்டிருக்கலாம். ஆனால், அவர்கள் நமது பள்ளிவாசலைப் பார்க்கும் போது, நம்முடைய அஹ்மதிகளின் நடைமுறைகளைப் பார்க்கும் போது, உண்மையான இஸ்லாத்தின் முன்மாதிரியைப் பார்க்கும் போது, மேற்கொண்டு அவர்களுடைய சந்தேகங்களும் ஐயங்களும் அகன்று விடும்.

எவ்வாறு மக்களின் செயல்கள் நிரூபித்-துள்ளனவோ, எதிர்ப்பவர்களாக இருந்த அதே மக்கள் இன்று நம்முடைய நண்பர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் எதிர்ப்பதை விட்டு விட்டார்கள். சிறிது சிறிதாக இனியும் இது இன்னும் குறைந்து கொண்டே செல்லும். மக்களுக்குப் பள்ளிவாசல் பற்றியும் இஸ்லாம் பற்றியும் மேற்கொண்டு அறிமுகம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும் - இன்ஷா அல்லாஹ். மேலும், எங்களது இந்த நட்பு வட்டம் விரிவடைந்து கொண்டே செல்லும் என்று நாங்கள் நம்பிக்கை வைக்கிறோம்.

இதே போன்று அரசாங்கம் தரப்பிலிருந்து சிறுபான்மையினரின் பிரதிநிதியான பெண்மணியும் வந்திருந்தார். அவர் மார்க்க சுதந்திரம் இருக்க வேண்டும் என்று மிக நல்ல விஷயத்தைக் கூறினார். இவர்களின், ஜெர்மனியின் சட்டம் முழுமையான முறையில் மார்க்க சுதந்திரத்தை அளிக்கிறது. இதற்காக நாங்கள் அரசாங்கத்துக்கு நன்றியும் செலுத்துகிறோம்.

ஏனெனில், இந்த மார்க்க சுதந்திரத்தின் காரணமாகவே பல பாக்கிஸ்தான் மக்கள் அவர்களுக்குத் தங்கள் நாட்டில் மார்க்க சுதந்திரம் இல்லாததனால் இங்கு வந்து குடியேறினார்கள். மேலும், இங்கு வந்து அவர்களுக்கு நிம்மதியாக அரசாங்கத்தின் அடைக்கலத்தில் இருப்பதற்கு நல்வாய்ப்பு கிடைத்தது. இவ்வாறு அவர்களால் மார்க்க சுதந்திரத்திற்கான உரிமையை சரியான முறையில் நிறைவேற்ற முடியும். அவர்களுக்கு எந்தவொரு தங்கு தடையும் ஏற்படாது.

மேலும், இந்த வகையில், நாம் எந்நிலையிலும் அரசாங்கத்துக்கு நன்றி செலுத்துகிறோம். அந்த நாடுகளில் மார்க்க சுதந்திரம் அழிக்கப்படுகின்ற அல்லது எந்தவொரு வகையான சுதந்திரமோ அழிக்கப்படுகின்ற அதே வேளையில், இந்த நாடுகளில் அவை வரவேற்கப்படுகின்றன. அத்துடன் தம்முள் ஈர்த்துக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. பல்வேறு மதங்களைச் சேர்ந்த மக்கள் ஒருவர் மற்றவருடன் அன்புடன் நடந்து கொள்கிறார்கள் என்ற ஒரு மகிழ்ச்சி தரும் விஷயத்தையும் இவர்கள் கூறினார்கள்.

நான் துவக்கத்தில் கூறியது போன்று, இதுவே (நமது) போதனையாகும். ஒவ்வொரு மார்க்கத்தின் தோற்றுநரும் இந்தப் போதனையைத்தான் கொண்டு வந்தார். அதாவது, நீங்கள் உங்களைப் படைத்தவனை வணங்கும் அதே வேளையில், ஒருவர் மற்றவருக்கான உரிமையையும் நிறைவேற்றுங்கள். ஒருவர் மற்றவருடன் நல்லொழுக்கத்துடன் நடந்து கொள்ளுங்கள். உரிமைகளைச் செலுத்துவது இஸ்லாத்தின் அடிப்படை கட்டளையாகும்.

இஸ்லாம் உங்களுடைய உரிமைகளுக்காக மட்டும் சண்டையிடுங்கள் என்று போதனை வழங்கவில்லை. மாறாக, இஸ்லாம் கூறுவதாவது, மற்றவர்களுக்கான உரிமையைச் செலுத்துவதற்கும் முயற்சி செய்யுங்கள். நீங்கள் மற்றவர்களுக்கான உரிமையைச் செலுத்துவதற்கு முயற்சி செய்யும்போதுதான் உலகில் அமைதியும் நிலைபெறும். அன்பு, நேசத்தின் சமூகமும் உருவாகும். இதுதான் இன்று நமக்கு உலகில் தேவைபடுகிறது.




பாராளுமன்றத்தின் உறுப்பினர் வந்திருந்தார். இரண்டு நாள்களுக்கு முன்பும் அவருடன் சந்திப்பு நிகழ்ந்தது. இவர் கூறுவதையும் கேட்டேன. இவர் தம்முடைய அதே விஷயங்களை ஒரு புதிய கோணத்தில் இன்றும் எடுத்துரைத்தார். மேலும், அஹ்மதிய்யா ஜமாஅத்துடனான தொடர்பைப் பற்றி கூறினார்.

எனவே, இவருக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இவர் சில இடங்களில் மதத்தின் பெயரில் கொலைகள் செய்யப்படுவதைப் பற்றியும் கூறினார். ஆனால், மார்க்கம் ஒருபோதும் அதற்கு அனுமதி அளிப்பதில்லை. மார்க்கமோ மற்றவர்களுக்குத் தொண்டு செய்யுங்கள் என்று கூறுகிறது.

அஹ்மதிய்யா ஜமாஅத், எங்கெல்லாம் எங்கள் ஜமாஅத் நிலைபெற்றிருக்கிறதோ, எங்கெல்லாம் மக்கள் எங்கள் ஜமாஅத்தில் இணைகிறார்களோ, குறிப்பாக, ஆப்பிரிக்காவின் நாடுகளில், தென் அமெரிக்காவின் நாடுகளில், அங்கெல்லாம் நாங்கள் அஹ்மதி முஸ்லிம்-களுக்கு மட்டும் தொண்டு செய்வதில்லை. அதையும் தாண்டி, ஒவ்வொரு மார்க்கத்தை ஏற்றுக் கொள்பவர்களுக்கும் நாங்கள் தொண்டாற்றுகிறோம்.

ஆப்பிரிக்காவில் எங்களுடைய பள்ளிக்கூடங்கள் நிறுவபட்டுள்ளன. மருத்துவமனைகள் நிறுவபட்டுள்ளன. இதே போன்று நாங்கள் Modern Village (நவீன கிராமம்) உருவாக்கியுள்ளோம். தண்ணீர் வசதி ஏற்படுத்தி தருகிறோம். மற்ற இரண்டாம், மூன்றாம் உலகங்களின் நாடுகளிலும் செய்கிறோம். மேலும், இதிலிருந்து பயனடைபவர்களில் 80 சதவிகிதம் பேர் அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் எந்தத் தொடர்பும் இல்லாதவர்கள் ஆவார்கள். அவர்கள் கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள். அல்லது மற்ற மதங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

எனவே, அஹ்மதிய்யா ஜமாஅத்தோ மார்க்க சுதந்திரம் பற்றிய பேச்சுகளை மட்டுமே பிரச்சாரம் செய்வதில்லை. அதற்கும் மேற்பட்டு, நாங்கள் இந்த விஷயத்தை செயலில் வெளிப்படுத்துகிறோம். உலகின் பல்வேறு நாடுகளில், ஏழை நாடுகளில், ஏழைகளுக்கு எவ்வித மத பாகுபாடின்றி கல்வி கிடைக்கச் செய்ய வேண்டும்; இவர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டும்; இவர்களுக்குக் குடிப்பதற்குத் தண்ணீர் கிடைக்கச் செய்ய வேண்டும்.



தண்ணீரைப் பார்த்து செலவு செய்யுங்கள் என்று அரசாங்கம் தரப்பிலிருந்து மீண்டும் மீண்டும் நினைவூட்டவும் படுகிறது. அப்படியிருந்தும், நாம் இங்கு முன்னேற்றமடைந்த நாடுகளில் வாழ்ந்த வாறு தூய்மையான தண்ணீரை அருந்துவதன் முக்கியத்துவம் என்ன என்பதை நம்மால் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது.

அந்த மக்களுக்குக் குடிப்பதற்குத் தூய தண்ணீர் கிடைப்பது ஒருபுறம் இருக்கட்டும், கொஞ்சம் தண்ணீர் கொண்டு வருவதற்காக அவர்களுடைய பிள்ளைகள் பல மைல்கள், பல கி.மீ தூரம் பயணம் செய்ய வேண்டி வருகிறது. பிறகுதான் ஒரு வாளி தண்ணீரை எடுத்து தலையில் சுமந்து வருகிறார்கள். மேலும், தங்களுடைய வீடுகளின் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்கிறார்கள்.

அந்த நாடுகளில் சின்னச் சின்ன கிராமங்களில், தொலைதூர கிராமங்களில் தொலைதூர பகுதிகளில், நம்முடைய தன்னார்வலர்கள் செல்கிறார்கள். வேலை செய்கிறார்கள். அங்கு குழாய்கள் அமைக்கிறார்கள். பம்ப் போட்டுக் கொடுக்கிறார்கள். அவர்களுக்குத் தண்ணீர் கிடைக்கச் செய்கிறார்கள். அவர்களுடைய வீட்டுக்கு முன்னால் அவர்களுக்குக் குழாய் தண்ணீர் கிடைத்து விடுகிறது. குடிப்பதற்குத் தூய தண்ணீர் கிடைத்து விடுகிறது. அப்போது அவர்களது மகிழ்ச்சியைப் பார்க்க வேண்டுமே!

இங்கு யாருக்காவது லாட்டரீ அடித்தால் கூட, பெரிய தொகை லாட்டரீயில் வந்தால்கூட, அவ்வளவு மகிழ்ச்சி ஏற்படாமல் போகலாம். அவ்வளவு மகிழ்ச்சி அந்த மக்களுக்குத் தூய தண்ணீரைப் பார்த்து ஏற்படுகிறது. அவ்வளவு தூரத்திற்குச் சென்று தண்ணீர் கொண்டு வருவோம். அதுவும் அசுத்தமான நீராக இருக்கும். அதை அருந்திய பிறகு, நோய்கள் பரவும். அந்தத் துன்பத்தில் இருந்து தப்பித்து விட்டோமே என்று மகிழ்ச்சியடைவார்கள்.

ஆக, அஹ்மதிய்யா ஜமாஅத் இந்தத் தொண்டுகளையும் உலகில் ஆற்றுகிறது. எங்கெல்லாம் எங்களுடைய ஜமாஅத் நிலைபெறுகிறதோ, பள்ளிவாசல்கள் கட்டப்படுகிறதோ அங்கு அத்துடன் சேர்த்து இந்தத் திட்டங்களும் நடைபெறுகின்றன. மேலும், அஹ்மதி முஸ்லிமாக இருந்தால் தான் இந்த வசதிகள் கிடைக்கும் என்ற எந்த நிபந்தனையும் கிடையாது. மாறாக, நான் கூறியது போன்று, 80 சதவிகிதம் பேர் முஸ்லிம் அல்லாதவர்கள் ஆவார்கள். அவர்கள் எங்களுடைய திட்டதிலிருந்து பயனடைகிறார்கள்.

ஆ.ஃ.ப்கானிஸ்தானின் உதாரணத்தை அவர்கள் கூறினார்கள். பெண்களுக்கான உரிமைகள் செலுத்தப்படுவதில்லை என்று பெண்களுக்கான உரிமைகளை செலுத்துவதைப் பற்றிய உதாரணத்தைக் கூறினார்கள்.

இஸ்லாத்தின் போதனையோ, திருக்குர்ஆனின் போதனையோ, பெண்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். மிக மேலான முறையில், அவர்களுடன் நடந்து கொள்ளுங்கள் என்பதாகும். ஆண்களான உங்களுடைய உணர்வுகள் எப்படி இருக்கின்றனவோ அப்படித்தான் பெண்களுடைய உணர்வுகளும் இருக்கின்றன. உங்களுக்கு ஆசைகள் இருப்பது போன்றுதான் அவர்களுக்கும் ஆசைகள் இருக்கின்றன. எனவே, அவர்களை கண்ணியமாகவும் மரியாதையாகவும் பாருங்கள்; அவர்களுடைய ஆசைகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்யுங்கள் என்பதுதான் திருக்குர்ஆனின் கட்டளை ஆகும்.

ஆயினும், இஸ்லாமிய போதனை, மார்க்கப் போதனைக்குள் இருந்த வண்ணம், திருக்குர்ஆன் வழங்கிய அந்த செயல் திட்டத்திற்குள் இருந்த வண்ணம், அந்த மார்க்க சுதந்திரத்தைப் பயன்படுத்துவது ஆகுமானது.

எங்களுடைய முஸ்லிம் பெண்களில், அஹ்மதி முஸ்லிம் பெண்களில் பலர் மருத்துவர்களாகவும், பொறியாளர்களாகவும், வேளாண்மை செய்பவர்களாகவும், பொருளாதார வல்லுநர்களாகவும் இருக்கிறார்கள். இன்னும் பல்வேறு துறைகளில் இருக்கிறார்கள்.

சிலர் தொண்டாற்றுவதற்காக வெளியிலும் செல்கிறார்கள். மேலும், தம்முடைய வாழ்வை இந்தப் பணிக்காக அர்ப்பணிக்கிறார்கள். ஆக, இந்த வகையில், பெண்களுக்கு அந்த உரிமைகள் அனைத்தும் இருக்கின்றன. அதே போன்று சொத்துரிமை உள்ளது. எல்லா விதமான உரிமைகளையும் இஸ்லாம் வழங்கியுள்ளது.

எவ்வாறிருப்பினும் மார்க்கங்களுக்கு கண்ணியம் அளிப்பது மிகவும் அவசியம் ஆகும். மேலும், எல்லா

மார்க்கங்களும் ஒன்றாக இருப்பதற்காகவும் உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்காகவும் சமூகத்தில் அன்பு மற்றும் நேசத்தைப் பரப்புவதற்காகவும், ஒருவர் மற்றவருக்கு கண்ணியம் அளிப்பது அவசியம் ஆகும். இஸ்லாம் ஒவ்வொரு மார்க்கத்திற்கும் கண்ணியமளிக்குமாறு கட்டளையிடுகிறது.

நான் கடந்த நாட்களில், அங்கும் எங்கள் பள்ளிவாசல் திறக்கப்பட்டபோது கூறினேன். அதாவது, இஸ்லாம் தன்னுடைய பள்ளிவாசல்களைப் பாதுகாக்குமாறு மட்டும் போதிக்கவில்லை. மாறாக, இஸ்லாம் கூறுவதாவது, ஒருவர் தேவாலயத்தின் மீது தாக்குதல் தொடுத்தால் அதையும் நீங்கள் பாதுகாக்க வேண்டும். ஒருவர் யூத வழிபாட்டுத் தலத்தைத் தாக்கினால் அதையும் நீங்கள் பாதுகாக்க வேண்டும். ஒருவர் கோயிலைத் தாக்கினால் அதையும் நீங்கள் பாதுகாக்க வேண்டும்.




எனவே, எவர்கள் இஸ்லாத்தின் பெயரில் தேவாலயங்களை எரிக்கிறார்களே அல்லது ஏதாவது ஒரு வகையான தாக்குதல் தொடுக்கிறார்களே இது இஸ்லாத்தின் போதனை அல்ல. நான் கூறியது போன்று, திருக்குர்ஆனின் போதனையோ இதற்கு முற்றிலும் மாற்றமானது. அதுவோ இந்த எல்லா மதங்களையும் பாதுகாக்குமாறு கூறுகிறது.

மேயர் சாஹிபும் மிகவும் உயரிய விஷயங்களைப் பேசினார். இங்கு இந்த சபையில் பல்வேறு அரசியல் கட்சி மக்கள் இணைந்துள்ளார்கள் என்று அரசியல் கட்சிகளைப் பற்றி இவர்கள் கூறினார்கள். இது எதை வெளிப்படுத்துகிறது என்றால், அஹ்மதிய்யா ஜமாஅத் இந்த சமூகத்தில் தன்னை இணைத்துக் கொள்வது மட்டுமின்றி, இவர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி ஒரு மேடையில் கொண்டு வருகிறது.

இதற்குக் காரணம், நாங்கள் ஒருவர் மற்றவருடன் அன்பு, நேசம் மற்றும் சகோதரத்துவ சூழல் உருவாக வேண்டும் என்று விரும்புவதே ஆகும். ஒரு மனிதர், மனிதர் என்கிற வகையில், ஒருவர் மற்றவருக்கு கண்ணியமும் மரியாதையும் அளிக்க வேண்டும். இதுவே நம்மை ஒருவர் மற்றவருக்கான உரிமைகளைச் செலுத்தக்கூடியதாக ஆக்கும். இதுவே இஸ்லாத்தின் கட்டளை ஆகும்.

இஸ்லாம், திருக்குர்ஆன் கூறியுள்ளது: உங்களுக்கு இரண்டு கட்டளைகள் உள்ளன. ஒன்று உங்களைப் படைத்தவனுக்கான உரிமைகளை நிறைவேற்றுங்கள். மற்றொன்று அடியார்கள் ஒருவர் மற்றவருக்கான உரிமைகளை நிறைவேற்றுங்கள்.

மேலும், எவ்வாறு உரிமைகளை நிறைவேற்றுவது என்று இதற்காக பல்வேறு விளக்கங்களைக் கூறியுள்ளது. உரிமையை நிறைவேற்றுவதற்கான இந்த விஷயங்கள் உருவாகி விட்டால், நான் முதலில் கூறியது போன்று, உங்களுடைய உரிமையைப் பெறுவதற்காக மட்டும் சண்டையிடாதீர்கள். அதற்கும் மேற்பட்டு, மற்றவர்களுக்கான உரிமைகளை வழங்குவதன் பக்கமும் கவனம் செலுத்துங்கள். பிறகே உண்மையான அமைதி, அன்பு மற்றும் நேசத்தின் சூழல் உருவாகிறது.

எனவே, நாமோ உரிமைகளைச் செலுத்துபவர்களும் உண்மையான அமைதியை நிலைநாட்டுபவர்களும் ஆவோம்.

அண்டை அயலார்களுக்கான உரிமையைப் பற்றி பேசினார்கள். அண்டை அயலாருக்கான விஷயங்களில் நான் இந்த அளவு மட்டுமே கூறிக் கொள்கிறேன். இஸ்லாத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த விஷயத்தில் எந்த அளவு அழுத்தம் கொடுத்துள்ளர்கள் என்றால், சொத்துரிமையிலும் அண்டை அயலாரை இணைத்து விடுவார்களோ என்று சஹாபா கருதினார்கள். ஆக, இந்த அளவுக்கு இஸ்லாத்தின் போதனை உள்ளது. இந்த விஷயங்கள் எப்படிப்பட்டவை என்றால், இவை அன்பு, நேசம், அமைதி மற்றும் சகோதரத்துவத்தை ஊக்குவிக்கின்றன; அவற்றைப் பரப்புகின்றன.

மேலும், இதற்காகவே இன்று நாங்கள் முழு உலகிலும் பணியாற்றுகின்றோம். மேலும், இந்தப் போதனைக்காகவே எவ்வித மத பாகுபாடின்றி நாங்கள் ஒவ்வொருவருடனும் தொடர்பு வைத்திருக்க விரும்புகிறோம். இந்தப் போதனையே உலகில் அமைதி மற்றும் உண்மையான சகோதரத்துவத்தை நிலைநாட்டக்கூடியதாக அமையும்.

இந்தப் பள்ளிவாசல் உருவான பிறகு, இங்குள்ள மக்களும் பள்ளிவாசலின் இந்தக் கட்டடமும் இது இங்கு இருப்பதும் மேற்கொண்டு இஸ்லாத்தின் உண்மையான போதனையைப் பற்றி உங்களுக்குத் தெரியப்படுத்தும் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

இஸ்லாத்தைப் பற்றி சில தவறான கண்ணோட்டங்-களை சில தவறான மக்கள் பரப்பி விட்டார்களே அவை அந்த மக்களின் சொந்த பலன்கள்தான்; அவர்களுடைய வீணான சிந்தனைகள்தான். அதற்கு இஸ்லாத்தின் போதனை-யோடு எந்தத் தொடர்பும் இல்லை என்பது உங்களுக்குத் தெரிந்து விடும். இஸ்லாத்தின் போதனையோ அன்பு, நேசம் மற்றும் சகோதரத்துவத்திற்கான போதனை ஆகும்.

மேலும், நான் துஆ செய்கிறேன், இறைவன் உலகத்தில் உள்ள மனிதர்களுக்கு அவர்கள் ஒருவர் மற்றவருடன் அன்பு, நேசம் மற்றும் சகோதரத்துவத்துடன் இருப்பவர்களாக ஆவதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக!

மேலும், எல்லாவற்றிற்கும் மேலாக தம்மைப் படைத்த இறைவனை அடையாளம் காண்பவர்களாக ஆவார்களாக! அவனை வணங்கக் கூடியவர்களாக இருப்பார்களாக! ஜஸாக்கல்லாஹ்! நன்றி!




# ஜல்ஸா சாலானாவின் முக்கியத்துவம், நோக்கங்கள், குறிக்கோள்கள் மற்றும் அதன் அருள்கள்

இறை வழிகாட்டல்கள் மற்றும் நற்செய்திகளின் அடிப்படையில் ஜல்ஸா சாலானா ஆரம்பமானது. இது எண்ணற்ற அருள்களையும் பலன்களையும் தன்னுள் கொண்டுள்ளது. ஜல்ஸா சாலானா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மையின் அடையாளம் ஆகும். இது ஒருவர் மற்றவருடனான அன்பு மற்றும் சகோதரத்துவத்தை ஊக்குவிப்பதற்கான சிறந்த வழிமுறையாகும். உலக அமைதி மற்றும் பல்வேறு சமுதாயங்களுக்கிடையில் மத நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்கான உத்தரவாதமாகும். ஜல்ஸா சாலானா ஜமாஅத்தின் தர்பிய்யத், சீர்திருத்தம், அறிவு, ஆன்மிகம் மற்றும் இறையன்பில் முன்னேறுதல் ஆகியவற்றிற்குக் காரணியாகும்.

இந்த ஆண்டு மாநாடு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பிறப்பிடமும், அடக்கஸ்தலமும், அல்லாஹ்வின் அடையாளங்களும் நிறைந்த, அஹ்மதிய்யத்தின் தலைமையகமான காதியான் தாருல் அமானில் நடைபெறுகிறது என்ற வகையிலும் அருளுக்குரியதாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் கண்ணியத்திற்குரிய கலீ∴பாக்கள் ஜல்ஸா ஸாலானாவின் நோக்கங்கள், குறிக்கோள்கள், முக்கியத்துவம் மற்றும் பலன்கள் தொடர்பாக ஜமாஅத் மக்களுக்கு மீண்டும் மீண்டும் கவனமூட்டியுள்ளார்கள். அதே மேற்கோள்களைக் சான்றாகக் கொண்டு, ஜல்ஸா ஸாலானாவின் நோக்கங்கள், குறிக்கோள்கள், முக்கியத்துவம் மற்றும் பலன்கள் ஆகியவை ஜமாஅத் மக்கள் இறையவனுக்காகவே நடத்தப்படும் இந்த ஆண்டு மாநாட்டிற்காக இப்பொழுதிருந்தே துஆக்களுடன் கலந்து கொள்ள நிய்யத் கொள்ளும் பொருட்டு கீழே சிறப்பாக எடுத்துரைக்கப்படுகின்றன.

### ஜல்ஸாவில் வருவது சாதாரண விஷயம் ஒன்றுமல்ல

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: “இந்த ஆண்டு மாநாட்டை சாதாரண மனித மாநாடுகளைப் போன்று கருதாதீர்கள். முழுக்க முழுக்க உண்மைக்கு ஆதரவளிப்பதற்காகவும் இஸ்லாத்தின் கலிமாவை மேலோங்கச் செய்வதற்காகவும் இதற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. (ஆண்டு மாநாடு எனும்) இந்தத் தொடரின் அடிக்கல்லை இறைவன் தனது கைகளால் வைத்துள்ளான். இதற்காக அவன் சமுதாயங்களை ஆயத்தப் படுத்தியுள்ளான். அவை அண்மையில் இதில் வந்து இணையும். ஏனெனில், எவனுக்கு முன் எந்த விஷயமும் சாத்தியமற்றதில்லையோ, இது அந்த வல்லமை மிக்க இறைவனின் செயலாகும்.” (மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 1 பக்கம் 342 - 341))

### ஜல்ஸாவிற்கு வருமாறு வலியுறுத்தவும்

நான் ஒரு பக்கமோ ஜமாஅத் நண்பர்களுக்கும் இயக்கத்தின் பத்திரிகைகளுக்கும், “அதிகமான மக்கள் (ஆண்டு மாநாட்டுக்கு) வருவதற்காகவும், அவர்கள ் தமது அமலால் இறைவனின் அருளுக்கு உரியவர்களாக ஆவதற்காகவும், அதன் மூலம் பகைமையும் காழ்ப்புணர்ச்சியும் கொண்டிருக்கும் மக்களால் இயக்கத்துக்கு எந்த இழப்பையும் ஏற்படுத்த முடியாது என்பதை இறைவன் காட்டுவதற்காகவும், மக்களுக்கு ஜல்ஸாவிற்கு வருமாறு வலியுத்துங்கள்’ என்று கவனமூட்டுகிறேன்.

அத்துடன் இரண்டாவது இந்த விஷயத்தையும் கூற விரும்புகிறேன். எவ்வளவு அதிகமான மக்கள் ஜல்ஸாவிற்கு வருவார்களோ அவ்வளவே அதிகம் செலவு ஆகும். எனவே, நான் காதியானில் இருக்கும் மக்களுக்கும், வெளியில் இருக்கும் மக்களுக்கும் கவனமூட்டுவதாவது, எவர்கள் ஆண்டு மாநாட்டுக்கு வருகிறார்களோ அவர்களுடைய செலவு -களுக்கான ஏற்பாட்டை செய்யுங்கள்.

இறைவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் இவ்வாறு வாக்குறுதி அளித்துள்ளான்:

يَأْتِيْكَ مِنْ كُلِّ فَجٍّ عَمِيْقٍ وَيَأْتُوْنَ مِنْ كُلِّ فَجٍّ عَمِيْقٍ

பொருள்: தொலைதூரத்திலிருந்து உம்மிடம் அன்பளிப்புகள் வரும். தூர தொலைவில் இருந்து மக்கள் உம்மிடம் வருவார்கள். வருபவர்களை இறைவன் பின்னால் கூறியுள்ளான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இது தொடர்பாக கூறுகிறார்கள்: முதலில், விருந்தினர்களுக்காக ஏற்பாடுகள் இருப்பது அவசியம் என்பதற்காக இவ்வாறு வைத்துள்ளான். (குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 11, பக்கம் 248)

### உண்மைகள், இறைஞானம் மிக்க கருத்துகள் மற்றும் இறைஞானத்தில் முன்னேற்றம்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: “இந்த மாநாட்டில் ஈமான், உறுதியான நம்பிக்கை மற்றும் இறை ஞானம் ஆகியவற்றை முன்னேறச் செய்வதற்கு அவசியமான உண்மைகள், இறை ஞானமிக்க கருத்துகள் ஆகியவற்றைக் கேட்பதற்கான ஏற்பாடு இருக்கும். மேலும், இயன்ற வரை கருணை காட்டுபவர்களில் அதிக கருணை காட்டுபவனாகிய (இறை)வனிடம், இறைவன் அவர்களைத் தன் பக்கம் ஈர்த்துக் கொள்வானாக என்றும், தனக்காக ஏற்றுக் கொள்வானாக என்றும், அவர்களிடம் தூய மாறுதலை ஏற்படுத்துவானாக என்றும் அந்த நண்பர்களுக்காக குறிப்பான துஆக்களும் சிறப்பு கவனமும் இருக்கும்.

இந்த மாநாடுகளில் இருக்கும் இன்னொரு தற்காலிக பலன் என்னவெனில், ஒவ்வொரு புத்தாண்டிலும் எந்த அளவுக்குப் புதிய சகோதரர்கள் இந்த ஜமாஅத்தில் இணைவார்களோ அவர்கள் நிர்ணயிக்கப்பட்ட இந்த நாட்களில் வருகை தந்து, தம்முடைய முந்தைய சகோதரர்களின் முகங்களைப் பார்த்துக் கொள்வார்கள். அறிமுகம் ஏற்பட்டு, ஒருவர் மற்றவருக்கிடையிலான அன்புறவும், அறிமுகமும் முன்னேறிக்கொண்டே செல்லும்.



மேலும், எந்த சகோதரர் இடைப்பட்ட காலத்தில் இந்த உலகத்தை விட்டுச் சென்றிருப்பாரோ அவருடைய பாவமன்னிப்பிற்காக இந்த மாநாட்டில் துஆ செய்யப்படும். எல்லா சகோதரர்களையும் ஆன்மிகமான முறையில் ஒன்று சேர்ப்பதற்காக, அவர்களது மன இறுக்கம், அந்நியத்தன்மை மற்றும் நயவஞ்சகம் ஆகியவற்றை இடையிலிருந்து அகற்றுவதற்காக கண்ணியமுமும் மேன்மையும் மிக்க இறைவன் முன்னிலையில் முயற்சி மேற்கொள்ளப்படும். இந்த ஆன்மிக மாநாட்டில் இன்னும் பல ஆன்மிக நன்மைகளும், பலன்களும் இருக்கும். அவை அவ்வப்போது வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும் - இன்ஷா அல்லாஹுல் கதீர். (ஆஸ்மானி ஃபைஸ்லா ரூஹானி கஸாயின் தொகுதி 4 பக்கம் 376)

### தொடர்புகளில் விரிவாக்கம்

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஜல்ஸாவின் காரணமாக ஒவ்வோர் ஆண்டும் புதிய மனிதர்களுடன் அறிமுகம் ஏற்படுகிறது. தொடர்புகள் உருவாகின்றன. இவ்வாறு இயக்கத்தின் முன்னேற்றத்திற்காக, எத்தகைய உதவி மற்றும் வசதிகள் கிடைத்து விடுகின்றன என்றால், அதுவன்றி பல செலவுகள் செய்வதனாலும் அவை கிடைக்க முடியாது.

மக்களோ தொடர்புகளை உருவாக்கிக் கொள்வதற்காக தாமே பயணம் மேற்கொள்கிறார்கள். மற்றவர்களிடம் சென்றடைகிறார்கள். ஆனால், இங்கோ அல்லாஹ் தானே எங்கள் இல்லத்திற்கு மக்களை இழுத்துக் கொண்டு வருகிறான். உட்கார்ந்த இடத்திலேயே எங்களுக்கு நண்பர்களின் நிலைமைகள் குறித்த தகவல் எட்டுகிறது. மேலும், தொடர்புகள் மூலமாக எங்களுக்குப் பணி செய்வதற்கான வழிகள் திறந்து விடுகின்றன. பணிகளில் வசதிகள் உருவாகி விடுகின்றன. (குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 10 பக்கம் 287 - 288)

### ஆண்டு மாநாட்டுக்காகப் பயணம் மேற்கொள்பவர்களுக்காக துஆக்கள்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ்வுக்காக மட்டுமே நடத்தப்படும் இந்த ஆண்டு மாநாட்டுக்காக பயணம் மேற்கொள்ளும் ஒவ்வொருவருடனும் எல்லாம் வல்ல அல்லாஹ் இருப்பானாக! அவர்களுக்கு மாபெரும் நற்கூலி வழங்குவானாக! அவர்கள் மீது கருணை புரிவானாக! கஷ்டமான மற்றும் மன உளைச்சல் நிறைந்த அவர்களது நிலைமையை அவர்களுக்கு எளிமையாக்கி விடுவானாக!

அவர்களுடைய துன்பங்களையும் துயரங்களை -யும் அகற்றி விடுவானாக! எல்லா இன்னல்களில் இருந்தும் அவர்களுக்கு விடுதலை அளிப்பானாக! அவர்களுடைய நோக்கங்களைப் பெறுவதற்கான வழிகளை அவர்களுக்குத் திறந்து தருவானாக! மறுமை நாளில் தனது அருளும் கருணையும் உள்ள தனது அந்த அடியார்களுடன் அவர்களை எழுப்புவானாக! பயணம் முடியும் வரை அவர்களுக்குப் பிறகு அவர்களுடைய (குடும்பத்தாருக்குப்) பிரதிநிதியாக இருப்பானாக!

இறைவா! கண்ணியத்திற்குரியோனே! வழங்குபவனே! கருணையாளனே! சிரமங்களை அகற்றுபவனே! இந்த அனைத்து துஆக்களையும் ஏற்றுக் கொள்வாயாக! மேலும், எங்களுக்கு எங்கள் எதிரிகள் மீது தெளிவான அடையாளங்களுடன் வெற்றியை வழங்குவாயாக! ஏனெனில், உனக்கே எல்லா வல்லமைகளும் ஆற்றல்களும் இருக்கின்றன. (மஜ்முஆ இஷ்திஹாராத் தொகுதி 1 பக்கம் 342, 1989 வெளியீடு)

### இறைவனின் ஓர் அடையாளம்

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: “நான் முன்னரும் பலமுறை கூறி விட்டிருப்பது போன்று, இந்த ஆண்டு மாநாடு அல்லாஹ்வின் அடையாளங்களில் ஓர் அடையாளம் ஆகும். காதியான், ஒரு நாளில் அதன் பக்கம் எவரும் ஏறெடுத்துப் பார்த்திராத ஓர் இடமாகும். காதியான் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பெயரைக் கேட்டு, மிகவும் தூர தொலைவில் இருந்து காதியான் சென்றடையும் ஆசையில் புறப்பட்ட அத்தகைய பல மக்கள் இருக்கிறார்கள். ஆனால், பட்டாலா அல்லது அமிர்தசரஸுக்கு வந்து திரும்பிச் சென்று விடுவார்கள். ஏனெனில், காதியானில் மிகப் பெரும் தஜ்ஜாலிய குழப்பம் உள்ளது என்று அவர்களுக்குக் கூறப்பட்டு வந்தது.

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)




*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

கலீ∴பாவின் சொற்பொழிவுகளைக் கேட்ட பிறகு, உண்மையான இஸ்லாத்தின் போதனைகளை முதன் முறையாகப் புரிந்து கொண்டதாக பலர் கூறுகின்றனர். இதுவே கிலா∴பத் உத்திரவாதம் வழங்கிய ஒழுங்குமுறை ஆகும்.

நமது ஜமாஅத்தின் வரலாறு, அஹ்மதிகளுக்கு எதிரான அட்டூழியங்களாலும் ஆயிரக்கணக்கில் இல்லா விட்டாலும் நூற்றுக்கணக்கான ஷஹாதத்துகளாலும் சிதைக்கப்பட்டுள்ளது. இத்தகைய மனதை உலுக்கும் காலங்களில், கிலா∴பத்தே எப்போதும் நம்மை வழி நடத்தி வந்துள்ளது.

28 மே, 2010, கிலா∴பத் தினத்துக்கு அடுத்த நாள், ஒவ்வோர் அஹ்மதிக்கும் வேதனையான நாளாக அமைந்தது. லாஹுரில் உள்ள நமது இரண்டு பள்ளிகளுக்குள் பயங்கரவாதிகள் வலுக்கட்டாயமாக நுழைந்து வெள்ளிக் -கிழமை தொழுகைக்காக அங்கு கூடியிருந்த தொழுகை -யாளிகளின் உயிரைப் பறித்துக் கொண்டிருப்பதாக செய்திகள் வந்தன.

நானும் என் மனைவியும், தாக்குதல்களின் நேரலைப் படங்களைக் காட்டிய தொலைக்காட்சித் திரையின் முன் அமர்ந்திருந்தது எனக்கு நினைவிருக்கிறது. நாங்கள் மரத்துப்போய் இருந்தோம். வார்த்தைகள் என்ன ஒரு பார்வையைக் கூட எங்களால் பரிமாறிக் கொள்ள முடியவில்லை. எங்கள் கண்கள் கண்ணீருடனும் எங்கள் உள்ளங்கள் துஆக்களாலும் நிறைந்திருந்தன.

பாதுகாப்பு படையினர் வேடிக்கை பார்த்தனர்; தடுக்க முயற்சிக்கவில்லை. அன்று 86 அஹ்மதிகள் ஷஹாதத் அடைந்தனர். அஹ்மதிகள் அனைவரும் துக்கமும் அதிர்ச்சியும் அடைந்தனர்.

நம் உணர்வுகளை அமைதியாக மாற்றும் வேலை ஒரு மனிதரிடம் விடப்பட்டது. அதே நாளில், நம்முடைய இமாம் (அய்யதஹுல்லாஹ்...) தம்முடைய வெள்ளிக்கிழமை குத்பாவைக் கொடுத்தபோது, மிகவும் அமைதியுடனும், வேதனை போக்கும் குரலுடனும் நமது காயங்களுக்கு களிம்பு தடவத் தொடங்கினார்கள்.

அதன் தாக்கம் உடனடியாக இருந்தது. ஓர் அமைதி நம் மீது இறங்கத் தொடங்கியது. அன்னாரது சொற்களின் குணப்படுத்தும் ஆற்றல், அச்சத்திற்குப் பிறகு அமைதியைக் கொண்டு வருவதான அல்லாஹ்வின் வாக்குறுதிக்கு அசைக்க முடியாத சான்றாகும்.

ஹுஸூரின் நிலை என்னவாக இருந்தது என்பதை யாராலும் கற்பனை செய்து பார்க்க முடியாது. அன்னார் நம்மை, ஆம் உங்களையும் என்னையும், தம்முடைய குழந்தைகள் என்று கூறியுள்ளார்கள். அன்னார் நம் மீது கொண்டிருக்கும் அன்பு, ஒரு தாய் தனது குழந்தைகளின் மீது கொண்டிருக்கும் அன்பை விட அதிகம் என்று கூறுகிறார்கள். அன்னார் தம்முடைய 86 குழந்தைகளை இழந்துள்ளார்கள். அவர்கள் எவ்வளவு துக்கமடைந்திருப்பார்கள். ஆனால் அன்னார் மற்ற இலட்சக்கணக்கான குழந்தைகளை ஆறுதல்படுத்தி அமைதியாக வைத்திருக்க வேண்டியிருந்தது. அதையே அன்னார் தமது சொற்களின் மூலம் செய்தார்கள். அவரே அல்லாஹ்வின் ஆதரவைப் பெற்ற இறைவனால் நியமிக்கப்பட்ட கலீ∴பா ஆவார்கள். இல்லையெனில் இது மனிதனால் சாத்தியமில்லாத ஒரு செயலாகும்.


பின்னர் மிக சமீபத்தில் புர்கினா∴பாஸோவில், நமது சகோதரர்கள் அதே சூழ்நிலையை எதிர்கொண்டனர். அஹ்மதிய்யத்தின் ஒன்பது ஒளிரும் நட்சத்திரங்கள் மிகக் கொடூரமான முறையில் ஷஹீத் ஆக்கப்பட்டனர். மீண்டும், கலீ∴பாவின் வார்த்தைகள்தான் நமக்கு அமைதியைத் தந்தன.

துன்பங்களை எதிர்கொள்ளும் ஒவ்வொரு தருணத்திலும், இறைத் தூண்டுதலின் கீழ் பல்வேறு திட்டங்கள் அல்லது ஒழுங்குமுறைகளை நமது கிலா∴பத் நடைமுறைப்படுத்தியுள்ளது. அவை வெற்றி அளிப்பவையாக நிரூபணமாகியுள்ளன.



ஜமாஅத்தை முற்றிலும் அழிப்போம். மேலும் காதியானை செங்கல் செங்கலாக சிதைப்போம் என்றவாறு 1934-ல் மஜ்லிஸே அஹ்ராரே இஸ்லாம் என்ற பெயரில் ஜமாஅத்துக்கு எதிரான இயக்கம் உருவான அந்த இக்கட்டான காலங்களை நினைவு கூருங்கள். உலகம் பதிலுக்காக காத்திருந்தது. அநேகமாக பழிவாங்கும் தன்மை கொண்ட நடவடிக்கைக்காக காத்திருந்தது. ஆனால் அனைவருக்கும் ஆச்சரியமளித்த கலீ∴பாவின் பதில், தஹ்ரீகே ஜதீது திட்டத்தின் அறிவிப்பாகும்.

அந்தத் திட்டத்தின் பலன் இன்று வரை அறுவடை செய்யப்பட்டு வருகிறது என்பதற்கு வரலாறு சான்று பகர்கின்றது. எனவே, கிலா∴பத்தே அந்த ஒழுங்குமுறையின் உத்தரவாதமாக இருந்தது. தாங்கள் தான் வெற்றி பெறுவோம் என்று கூக்குரல் இட்டவர்களில் யாரும் மிஞ்சவில்லை. மறுபுறம் இந்த தஹ்ரீகே ஜதீது திட்டமே, இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை உலகின் மூலை முடுக்கெல்லாம் சென்றடையச் செய்தது. அதே போன்று, இந்த முறை கிராமப்புறங்களுக்கு வக்∴பே ஜதீது திட்டமும் அதே தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.




இவை இறைத் தூண்டுதலால் உண்டான திட்டங்களாக இருந்ததால்தான், இவை அனைத்தும் சாத்தியமானது. மேலும் ஒவ்வொரு கலீ∴பாவின் வழிகாட்டுதலும் அதன் வெற்றிக்கு உத்திரவாதம் அளிப்பதை உறுதி செய்துள்ளது.

உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ள சமூகத்தின் பல்வேறு பிரிவுகளின் நிலைமைகளால் அனைத்து கலீ∴பாக்களும் கவலையுற்று, அவர்களின் துன்பங்களை நீக்குவதற்கு பல்வேறு திட்டங்களை வகுத்துள்ளனர்.

மனித நேயத்திற்கான சேவை, ஹஸ்ரத் முதலாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தாருஸ் ஸியா∴பத்தை நிறுவியதிலிருந்து காதியானில் தொடங்கியது. முன்னர் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இல்லத்தில் மேற்கொள்ளப்பட்ட சேவை, இன்று Humanity First, IAAAE மற்றும் பல்வேறு மருத்துவ அமைப்புகளால் மேற்கொள்ளப்-படும் உலகளாவிய மனிதாபிமான சேவைத் திட்டங்களின் கட்டமைப்பாக மாறியுள்ளது. இவை பொருளாதார, சமூக, மருத்துவ உதவிகள் போன்ற பலதரப்பட்ட உதவிகள் வழங்குவதில் நீண்ட தூரம் கடந்து வந்துள்ளன.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் இவ்வனைத்தையும் உலக அளவில் எடுத்துச் சென்றுள்ளார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவரகளின் தனிப்பட்ட கவனம், ஒவ்வோர் அடியிலும் அன்னாரது வழிகாட்டுதல், இது வேதங்களின் வெற்றிக்கு முக்கியமானதாக இருந்தது என்று தன்னார்வலர்கள் கூறுகின்றனர்.

நிலநடுக்கம் ஏற்பட்டதை எண்ணிப் பாருங்கள்... சில முஸ்லிம் அல்லாதவர்களை உள்ளடக்கிய Humanity First ஜெர்மன் குழு செல்வதற்குத் தயாராக இருந்தது. தேவையான பொருட்களைக் கட்டி புறப்படத் தயாராக இருந்தபோது, புறப்படுவதை சிறிது தாமதப்படுத்துமாறு ஒரு செய்தி ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களால் இலண்டனில் இருந்து அனுப்பப்பட்டது. குறிப்பாக அந்த முஸ்லிம் அல்லாத ஜெர்மானியர்களின் திகைப்பை கற்பனை செய்து பாருங்கள். பூகம்பத்திற்குப் பிந்தைய உதவியைப் பொருத்தவரையில் நேரம் மிகவும் முக்கியமானது. ஆனால் இங்கே அவர்கள் தாமதிக்குமாறு கூறப்பட்டனர்.

அன்று இரவு மற்றொரு நிலநடுக்கம் அந்தப் பகுதியைத் தாக்கியது. அதன் பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் ‘இப்போது நீங்கள் தொடரலாம்’ என்ற செய்தியை அனுப்பினார்கள். கலீ∴பாவே நிச்சயமாக ஒழுங்குமுறைக்கு உத்திரவாதம் அளிப்பவர்கள் ஆவார்கள் என்பதை அந்த ஜெர்மானியர்கள் ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது. அவர்கள் விரும்பும்போது அவர்கள் வெளியேறியிருந்தால், பெரும்பாலும் அவர்கள் எதிர்மறையான தாக்கத்திற்கு ஆளாகி இருக்கக்கூடும். மேலும் பணி தோல்வி அடைந்திருக்கும்.

IAAAE பல தசாப்தங்களாக தங்களின் சொந்த மனிதாபிமான திட்டங்களில் முன்னணியில் உள்ளது. ஆப்ரிக்காவில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் சொந்த வாழ்க்கை அனுபவத்துடன், அன்னார் திட்டங்களுக்கு தலைமை தாங்கினார்கள். அவற்றில் ஒன்று கிராமத் திட்டம்.


ஒவ்வொரு திட்டத்தின் ஒவ்வோர் அம்சத்தையும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கருத்தோடு இயக்குகிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது என்று (IAAAE) தலைவர் என்னிடம் கூறினார். மேலும் அந்த வழிகாட்டுதலை செயல்முறைப்படுத்துவது, வெற்றிக்கு மீண்டும் மீண்டும் உத்தரவாதமாக அமைந்தது.

சமீபத்தில் அவர்கள் புர்கினோ∴பாஸோவில் MITC, மஸ்ரூர் இன்டர்நேஷனல் டெக்னிகல் காலேஜ் கட்ட திட்டமிட்டிருந்ததாகக் கூறினார்கள். இருப்பினும் அவர்களை ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் வேறு ஏதாவது இடத்தில் செயல்படுத்துமாறு வழிகாட்டினார்கள். எனவே, அவர்கள் திட்டத்தை நைஜீரியாவிற்கு மாற்றினர். இது விலைமதிப்பற்ற ஒன்றாக நிரூபணமானது.

இந்தத் திட்டங்கள் கிலா∴பத்துக்கு இறைத் தூண்டுதலால் ஏற்பட்டதாக மட்டுமல்லாமல், அவற்றின் வெற்றிக்கு உத்திரவாதம் அளிக்க, கலீ∴பா அவர்களைத் தொடர்ந்து வழிநடத்தவும் மேற்பார்வை செய்யவும் செய்கிறார்கள்.

நமது அன்புக்குரிய இமாம் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள், ஒற்றை மனிதராக, உலகெங்கிலும் உள்ள ஆன்மிக மற்றும் மதச்சார்பற்ற திட்டங்களுக்கான எத்தகைய ஒழுங்குமுறையை அமைத்துள்ளார்கள் என்றால், அதனால் ஒருபுறம் அமைதி பெருகுகிறது. மறுபுறம் அல்லாஹ்வுடனான பிணைப்பு பலப்படுத்தப்படுவதுடன் சக மனிதர்களின் உரிமைகள் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

“முன்னர், நம் தொலைக்காட்சிகளில் தோன்றி இஸ்லாத்தைக் குறித்தும், அதன் மேன்மைகளைக் குறித்தும், ஜமாஅத்தின் முன்னேற்றம் குறித்தும் பேசும் ஒரு கலீ∴பா இருந்தார். ஆனால் இப்போது அவர்களிடம், அதாவது ஜமாஅத்தே அஹ்மதிய்யாவிடம், இந்தப் பணியை மேற்கொள்ளும் இருவர் உள்ளனர்” என்று தமது தோல்வியை ஒப்புக் கொண்டபடி நமது எதிரிகள் புலம்பவும் ஒத்துக் கொள்ள வேண்டிய நிர்பந்தத்திற்கும் தள்ளப்படுகிறார்கள்.



அனைத்து முஸ்லிம்களையும் ஒன்றிணைத்து அவர்களை வெற்றிக்கு இட்டுச் செல்லும் ஒரு கலீ∴பா, ஓர் இமாம் முஸ்லிம்கள் மத்தியில் இல்லையே என்பதை முஸ்லிம் சமுதாயம் உணர்ந்துள்ளது. அவர்கள் அதற்காக முயற்சிகள் செய்தும் கூட அவர்கள் ஒன்றிணையத் தவறி விட்டனர். கிலா∴பத் அலா மின் ஹாஜின் நுபுவ்வத்தால் மட்டுமே இதைச் செய்ய முடியும். நம்மை ஒருங்கிணைத்த இந்த அருளை நம்மிடையே கொண்ட நாம் பாக்கியசாலிகள் அல்லவா? அந்த கிலா∴பத் தான் நமது ஒழுங்குமுறைக்கும் வெற்றிக்கும் உத்திரவாதம் அளித்துள்ளது.

இரண்டாவது கலீ∴பாவை ஏற்காமல் காதியானை விட்டு விலகிச் சென்ற அந்த துரதிஷ்டசாலிகளின் வரலாற்றை விட இதற்குப் பெரிய ஆதாரம் வேறு ஏதாவது இருக்க முடியுமா?

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபிகளான, அன்னாருடைய கையில் பைஅத் செய்த, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் விட்டுச் சென்ற விண்ணுலக பொக்கிஷங்களைத் தங்களிடம் கொண்டிருந்த இந்தக் குழுவை எண்ணிப் பாருங்கள். அவர்களில் பெரும்பாலோர் உயர் கல்வியறிவு பெற்றவர்களாகவும், உலக மற்றும் மார்க்க விஷயங்களில் அறிவுடையவர்களாகவும் கருதப்பட்டனர். மேலும் ஜமாஅத்தின் தூண்களாகக் கருதப்பட்டனர். அனைவரும் வெளியேறி 1914-இல் அஹ்மதிய்யா அஞ்சுமனே இஷாத்தே இஸ்லாம் என்ற பெயரில் லாஹூரில் ஒன்று கூடினர்.

அல்லாஹ்வினால் நியமிக்கப்பட்ட இமாமை விட்டு, கிலா∴பத்தை விட்டுப் பிரிந்து போனார்கள். கிலா∴பத்தால் உருவாக்கப்பட்ட ஒழுங்குமுறையின் கீழ் ஜமாஅத் அஹ்மதிய்யா, அல்லாஹ்வின் ஆதரவைப் பெற்றுள்ளது என்பதற்கு வரலாறு சான்று பகர்கின்றது. மேலும் இஸ்லாத்தின் செய்தி உலகின் மூலை முடுக்கெல்லாம் சென்றடைந்துள்ளது. இந்தப் பதாகையின் கீழ் இலட்சக்கணக்கானவர்களை ஒன்றிணைத்துள்ளது. மனித குலத்திற்கான சேவைகள் மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாறு இஸ்லாத்தின் அடிப்படைக் கூறுகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அதே சமயம், கிலாபத்தை இழந்தவர்கள், முன்னேற்றத்திற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். ஆனால் அல்லாஹ்வின் உதவி அருளப் பெறவில்லை.

எனது சொந்த ஊரான கில்லிங்ஹாமில் உள்ள ஒரு ஐரிஷ் எழுத்தாளர், டெக்லான் என்பவர், இஸ்லாத்தில் உள்ள பிரிவுகள் குறித்து பல புத்தகங்களை எழுதியுள்ளார். நான் சமீபத்தில் அவரைச் சந்தித்தேன். அவர் பாகிஸ்தானுக்குச் சென்று விட்டு திரும்பி வந்ததாக என்னிடம் கூறினார். அவர் லாஹூரி அஹ்மதிகளைச் சந்திக்க லாஹூருக்குச் சென்றிருந்தார். மேலும் அவர், அவர்களின் ஆண்டு மாநாடான வருடாந்திர ஜல்ஸாவில் கலந்து கொண்டிருந்தார்.

நான் மேலும் அறிய ஆவலாக இருந்தேன். எத்தனை பேர் கலந்து கொண்டார்கள் என்று அவரிடம் கேட்டபோது அவர் சொன்ன பதில் என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அவர் சுமார் 200 என்று கூறினார். நான் எனக்கு தவறாகக் கேட்டது என்று நினைத்தேன். அதனால் நான் மீண்டும் கேட்டேன். மறுபடி 200 என்று பதில் வந்தது. இந்த எண்ணிக்கை, நமது ஒரு சிறிய ஜமாஅத்தின் உள்ளூர் கூட்டத்தில் கூடுவதாக இருக்கக் கூடும்.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு, 1983-ல் ரப்வாவில் நடந்த நமது கடைசி ஜல்ஸாவில் இரண்டரை இலட்சம் பேர் கலந்து கொண்டனர். எண்ணிக்கையை விட்டு விடுவோம். முன்னேற்றத்திலும் கூட எந்த ஒப்பீடும் செய்ய முடியாது, இதற்கு மேல் எதுவும் சொல்ல வேண்டியதில்லை. இந்த ஒழுங்குமுறைக்கு உத்தரவாதமாகவும், நாம் காண்பதும் ஜமாஅத் அஹ்மதிய்யா கண்டுணர்வதுமான இந்த வெற்றியின் முன்னேற்றத்திற்கு உத்திரவாதமாகவும் கிலா∴பத் மட்டுமே இருந்து வருகின்றது.

கிலா∴பத்தின் இந்த அருளை இழந்த மற்ற தனி நபர்கள் அல்லது குழுக்களின் நிலைமையும் இதுவே ஆகும். அவர்கள் தோல்வியைத் தவிர வேறு எதையும் சந்திக்கவில்லை. நேர்வழி பெற்ற கிலா∴பத்தை நிறுவுவதான அல்லாஹ்வின் வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் இது ஒருபோதும் முடிவடையாது என்று நபி (ஸல்) அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள். அல்லாஹ் தனது வாக்குறுதியை நிறைவேற்றி விட்டான் என்பதற்கு நாமே சாட்சி. மேலும்

கிலா.ஃ.பத் எவ்வாறு ஒழுங்குமுறைக்கு உத்திரவாதம் அளித்துள்ளது என்பதை நாம், நம் வாழ்நாளில் பார்க்கும் பாக்கியம் பெற்றவர்கள் ஆவோம். எனவே ஒரு முக்கியமான பொறுப்பு நம் தோள்களில் உள்ளது என்பதை நாம் உணர வேண்டும்.

தலைவர் அவர்களே! உலகம் மிகவும் கடினமான காலங்களைக் கடந்து கொண்டிருக்கிறது. மேலும் சில சவாலான மற்றும் தீவிரமான சூழ்நிலைகளை நாம் எதிர்கொண்டு வருகிறோம். முஸ்லிம் உம்மத் திக்கு திசையின்றி உள்ளது. பிரிந்து போய் இருக்கின்றனர். உயிரற்ற உடலாக உள்ளனர். நாத்திகம் அதிகரித்து வருகிறது, நம் குழந்தைகள் தங்களுடைய பள்ளிகளில் அவர்களுக்குண்டான சவால்களை எதிர்கொள்கிறார்கள். நாளை மதிப்பிற்குரிய அஸ்ஹர் ஹனீ.ஃ.ப் சாஹிப் அவர்களின் சொற்பொழிவு, இதற்கான தீர்வுகளை நமக்கு தெளிவுபடுத்தும். உலகம் எதிர்கொள்ளும் பொருளாதார சவால்கள், அது தனக்கான பிரச்சனைகளை முன்வைக்கின்றன.

காலநிலை மாற்றம் மற்றும் புவி வெப்பமடைதல் ஆகியவை உலக வல்லரசுகளாலும் உங்களையும் என்னையும் போன்ற தனி மனிதர்களாலும் தீர்க்கப்பட வேண்டும். நீதியின்மையே உலக நெருக்கடியில் உள்ள பிரச்சனைகளுக்கான அடிப்படைக் காரணமாகும்.

இத்தகைய அச்சுறுத்தும் பிம்பத்தை உங்கள் முன் வைத்ததற்கு வருந்துகிறேன். ஆனால் என்னிடம் ஒரு நல்ல செய்தி உள்ளது. ஒரு தீர்வு இருக்கிறது. அது வெற்றிக்கான உத்திரவாதத்துடன் வருகிறது. கிலா.ஃ.பத்தே அஹ்மதிய்யா எவ்வாறு ஒழுங்குமுறையின் உத்திரவாதமாக இருந்தது என்பதையும், இந்த எல்லாப் பிரச்சனைகளுக்கும் விடையாக இருப்பதையும் நான் எனது உரையில் விவரித்தேன்.

நமது அன்பிற்குரிய இமாம் ஹஸ்ரத் ஐந்தாவது கலீ.ஃ.பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள், இந்த சவால்களையும் இன்னும் பலவற்றையும் எவ்வாறு கையாண்டார்கள் என்பதற்கும், மேலும் தமது உலகளாவிய முயற்சிகள் மூலம் இவற்றைத் தீர்ப்பதற்கான ஓர் ஒழுங்குமுறையை எவ்வாறு அமைத்துள்ளார்கள் என்பதற்கும் கடந்த 20 வருடங்கள் சான்றாகும்.

தனி மனிதர்களாக நமது சொந்த வாழ்க்கையில் ஒழுங்கை ஏற்படுத்துவதாகவும், பின்னர் ஜமாஅத்தாக ஓர் ஒழுங்குமுறையை ஏற்படுத்துவதாகவும் அந்த முயற்சிகள் அமைந்தன. ஆனால் ஹுஸூர் அவர்களின் முயற்சிகள் இதைத் தாண்டி, உலகில் அமைதியைக் கொண்டு வரவும், மிகவும் தேவையுடையவர்களின் துன்பத்தைப் போக்கவும் எட்டியுள்ளன.

இத்தருணத்தில் நமது பொறுப்பு என்ன என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். முதலாவதாக, நமது மத்தியில் கிலா.ஃ.பத்தின் வடிவத்தில் உள்ள அந்தக் கயிற்றை பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டும். நாம் தனிப்பட்ட தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நமது குடும்பங்களுக்கும் இதுவே பொருந்தும். நமது பொறுப்பை நமக்கு நினைவூட்டும் நமது இமாமின் வார்த்தைகளுடன் இந்த உரையை முடிக்கிறேன்.



‘இரண்டாவது வல்லமை’ (கிலா.ஃ.பத்) என்பது, ஒரு தேசத்தை ஒன்றிணைக்க வேண்டும். அதனை முரண்பாடுகளி-லிருந்து பாதுகாக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் இறைவனிடமிருந்து வந்த மகத்தான பரிசாகும். அது, ஜமாஅத்தை முத்துக்கள் போல ஒன்றிணைக்கக் கூடிய நூலாகும். முத்துக்கள் சிதறிக் கிடந்தால், அவை பாதுகாப்பாகவும் இருக்காது; அழகாகவும் இருக்காது. உண்மையில், ஒரு சரடில் கோர்க்கப்பட்ட முத்துக்களே பாதுகாப்பானவையாகவும் அழகில் சிறந்தவையாகவும் உள்ளன. உண்மையான ஈமான் இரண்டாவது வல்லமை இல்லாமல் முன்னேற முடியாது. எனவே, அன்பு, நேர்மை மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றின் இணைப்பை அதனுடன் வைத்துக் கொள்ளுங்கள். கிலா.ஃ.பத்திற்குக் கீழ்ப்படிவ-தற்கான உங்கள் பேரார்வத்தை நிரந்தரமானதாக ஆக்குங்கள். அதன் மீது எத்தகைய ஒரு பேரன்பை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்றால், அதனுடன் ஒப்பிடும்போது மற்ற எல்லா உறவுகளும் அற்பமாகத் தோன்ற வேண்டும். எல்லா அருட்களும் இமாமுக்கு விசுவாசமாக இருப்பதிலேயே உள்ளன. இதுவே உங்களுக்கு எல்லாப் பிரச்சனைகளுக்கும் சச்சரவுகளுக்கும் எதிரான கவசம் ஆகும். (மே 2003 அன்று ஹஸ்ரத் ஐந்தாவது கலீ.ஃ.பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் வழங்கிய சிறப்பு தூதுச்செய்தி)

நம்முடைய அன்பிற்குரிய இமாமின் இந்த ஞானமிக்க வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியக் கூடியவர்களாக அல்லாஹ் என்னையும் உங்கள் அனைவரையும் ஆக்குவானாக! ஆமீன்.

அல்லாஹ்வே! எங்கள் இமாம் எங்கிருந்தாலும் பரிசுத்த ஆவியால் - ரூஹுல் குத்தூஸைக் கொண்டு அவருக்கு ஆதரவளிப்பாயாக. அன்னாருக்கு நீண்ட ஆயுளை வழங்குவாயாக. அன்னாருடைய முயற்சிகளில் பரக்கத்தை வழங்குவாயாக.

முஸ்லிம்களே! அவரது வருகையைப் பற்றிய அறிவு உங்களுக்குக் கிடைத்து விட்டால் பனி மலைகளில் தவழ்ந்து செல்ல நேரிட்டாலும் சென்று உடனடியாக அவரிடம் பைஅத் செய்யுங்கள். ஏனென்றால் அவர் அல்லாஹ்வின் கலீஃபாவாகவும் மஹ்தியாகவும் இருப்பார். (அபூதாவூது பாபு ஹுரூஜுல் மஹ்தி)

# உலக சக்திகளை அமைதியின் பக்கம் வழிநடத்துவதில் கலீ:பாக்கள் மேற்கொண்ட முயற்சிகள்

ர:ஃபீக் அஹ்மது ஹயாத் சாஹிப் அமீர் ஜமாஅத், U.K.

தமிழாக்கம்: R. ஷஃபீக் அஹ்மது

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

மூன்றாம் கலீ:பா ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மது (ரஹி) அவர்களின் வருகையின் மூலம் பல்வேறு மனிதநேயப் பணிகள், குறிப்பாக ஆப்ரிக்கக் கண்டத்தில் நிறைவேற்றப்பட்டன. அன்னாரது கிலா:பத் காலகட்டத்தில் இரண்டு முக்கிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. :பஸ்லே உமர் அறக்கட்டளைத் திட்டத்தின் மூலமாக அன்னாரது தந்தையார் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களால் தொடங்கப்பட்ட திட்டங்கள் தொடர்வதற்கான நிதி வழங்கப்பட்டது. மேலும் நுஸ்ரத் ஜஹான் திட்டத்தின் வாயிலாக மேற்கு ஆப்பிரிக்காவில் நிரந்தரமான மனிதநேயப் பணிகள் சீரமைக்கப்பட்டன.


இங்கிலாந்தில் இருந்த அப்போதைய கேம்பியாவின் உயர் ஆணையர் நுஸ்ரத் ஜஹான் திட்டத்தின் வெற்றியைக் குறித்துப் பேசும்போது கூறியதாவது: “இந்த முழு நாடும் இந்தத் திட்டத்தில் இருந்து ஏதாவது பயன் பெற்று அஹ்மதிய்யத்தின் பக்கம் திரும்புகின்ற நாள் வெகு அருகில் வந்து கொண்டிருக்கிறது - அல்ஹம்துலில்லாஹ்!”

வளர்ச்சியுடன் பெரும் பாராட்டும் வருகின்ற அதே சமயத்தில், துரதிஷ்டவசமாக கடுமையான எதிர்ப்பும் சேர்ந்தே வருகிறது. 1974-ஆம் ஆண்டு பாகிஸ்தான் முழுவதும் ஜமாஅத்துக்கு எதிராக கலவரங்களும் போராட்டங்களும் வெடித்தன. பாகிஸ்தான் பாராளுமன்றம் செப்டம்பர் 7, 1974 அன்று அஹ்மதிகளை முஸ்லிமல்லாதவர்கள் என்று அறிவித்து ஒரு சட்டதிருத்தத்தை நிறைவேற்றியபோது அஹ்மதிகளுக்கு இழைக்கப்பட்ட அநீதி அதன் உச்சத்தை அடைந்தது. இத்தகைய எதிர்ப்பின் போதும் கூட, ஹுஸூர் (ரஹி) அவர்கள் அமைதியின் தூணாக உறுதியாக நின்றார்கள்.

ஸ்பெயினில் பஷாரத் பள்ளிவாசலுக்கு அடிக்கல் நாட்டும் தருணத்தில் ஹுஸூர் (ரஹி) அவர்கள், “எல்லாரிடத்திலும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு” என்ற அஹ்மதிய்யத்தின் பிரபலமான பொன்மொழியை அறிவித்தார்கள்.

1970-ஆம் ஆண்டு ஆறு மேற்கு ஆப்ரிக்க நாடுகளுக்கு அன்னார் மேற்கொண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க பயணத்தின் போது, மூன்றாவது கலீ:பத்துல் மஸீஹ் அவர்கள் அறிவித்தார்கள்:

“எல்லா மனிதர்களும் சமமானவர்கள், ஒரு மனிதருக்கும் இன்னொரு மனிதருக்கும் இடையில் எந்த வேற்றுமையும் இல்லை. உலகம் இதனை உணர்ந்து கொண்டால், துன்பங்கள் பெரிதும் குறைந்து விடும்.”



ஹுஸூர் (ரஹி) அவர்கள் நிகழ்த்திய மிகக் குறிப்பிடத்தக்க உரைகளில் ஒன்று ஜூலை 28, 1967 அன்று வேன்ட்ஸ்வொர்த் டவுண் ஹாலில் நடைபெற்ற மாநாட்டில் அன்னார் நிகழ்த்திய உரையாகும். இங்கு ஹுஸூர் (ரஹி) அவர்கள் அமைதிக்கான ஒரு தூதுச் செய்தியையும் ஓர் எச்சரிக்கையையும் முன்வைத்தார்கள். மூன்றாம் உலகப்போர் குறித்த ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது முன்னறிவிப்பை எடுத்துக் கூறியவாறு கூறினார்கள்: “ஆனால், கண்ணியத்திற்குரியவர்களே! இந்த முன்னறிவிப்பு, எல்லா முன்னறிவிப்புகளையும் போலவே, ஓர் எச்சரிக்கையே ஆகும் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. மனிதன் தன் இறைவன் பக்கம் திரும்பியவாறு, பாவமன்னிப்புக் கோரி தன் செயல்களைச் சரிசெய்து கொண்டால் பிறகு அதன் நிறைவேற்றம் தாமதமாகலாம் அல்லது தவிர்க்கவும் படலாம். மனிதன் செல்வம், அதிகாரம் மற்றும் கௌரவம் ஆகிய பொய்த் தெய்வங்களை வணங்குவதை விட்டு விட்டு, தன் இறைவனுடன் உண்மையான உறவை ஏற்படுத்தி, எல்லா எல்லைமீறல்-களிலிருந்தும் விலகி, இறைவனுக்கும் சக மனிதனுக்கும் தனது கடமையை நிறைவேற்றி, உண்மையான மனித நலனுக்காக உழைக்கக் கற்றுக் கொண்டால், இறை கோபத்தை அவனால் தவிர்க்க முடியும்.”

நான்காவது கலீ:பத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மத் (ரஹி) அவர்கள் மூலமாக கிலா:பத் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. ஜமாஅத் கடுமையான அநீதிகளை எதிர்கொண்டிருந்த நேரத்தில் அன்னார் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஏப்ரல் 26, 1984-ல் பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் ஜெனரல் ஜியாவுல் ஹக் ஜமாஅத்திற்கு

எதிராக ஓர் அவசர சட்டத்தை விதித்தார். இதன் காரணமாக, ஹுஸூர் (ரஹி) அவர்களுக்கு பாகிஸ்தானின் எல்லைக்குள் ஜமாஅத்தின் தலைவராகச் செயல்படுவது சாத்தியமற்றதாகி விட்டது. எனவே இதன் விளைவாக கிலா∴பத் பாகிஸ்தானில் இருந்து இங்கிலாந்திற்கு இடம் பெயர்ந்தது.

திடீரென இங்கிலாந்து கிலா∴பத்தின் அரியணையாக மாறியதால், ஜமாஅத்தின் செயல்பாடுகள் கற்பனைக்கு எட்டாத வகையில் விரிவடைந்தன. ஹுஸூர் ஜமாஅத்திற்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த சமூகத்திற்கும் பயனளிக்கக்கூடிய பல திட்டங்களைத் தொடங்கினார்கள்.



முழுமையான நீதி, கருணை மற்றும் அரசாட்சி என்ற தமது புத்தகத்தில், ஹுஸூர் (ரஹி) அவர்கள் சமூகத்தில் அமைதியைப் பெறுவதற்கு இறைவன் மற்றும் சக மனிதனுடனான ஒருவரது உறவு எவ்வளவு முக்கியமானது என்பது குறித்து இவ்வாறு கூறுகிறார்கள்: “மனிதன் இறைவனுக்குச் செலுத்த வேண்டிய உரிமைகளில் நியாயமாக இருக்கவில்லை என்றால், அவன் சக மனிதர்களுடன் நீதியோடு நடந்து கொள்வது என்பது சாத்தியமற்ற ஒன்றாகும். ஒருவர் நீதியின் வரைமுறைகளை அற்பமாகக் கருதும்போது தண்டனைக்குரிய விளைவுகளுக்கு பலியாகும் அபாயத்திற்குத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இத்தகைய தண்டனை இறைவனது கோபத்தின் காரணமாக விண்ணிலிருந்து இறங்கியது அல்ல. மாறாக, இயற்கையின் விதிகளை மீறுவதன் காரணமாக ஏற்படுகின்ற இயற்கையான விளைவாகும். இயற்கை விதிகளின் ஆதிக்கத்திற்கு அப்பாற்பட்டவர் எவரும் இல்லை.”

பல்வேறு திட்டங்களைத் தொடங்குவதன் மூலம் மனித குலத்திற்கான சேவை செய்வதே எப்போதும் ஹுஸூர் அவர்களது சிந்தனையின் மையப்புள்ளியாக இருந்தது. நடைமுறை உதவி மற்றும் நிதி திரட்டுதல் ஆகியவற்றின் மூலம் உதவ வேண்டிய தேவைக்காகவே ஹுஸூர் அவர்கள் அதிக நேரத்தையும் ஆற்றலையும் செலவு செய்தார்கள். ஏனெனில் இது சமூகத்தில் அமைதியை உருவாக்குவதற்கான ஒரு முக்கிய அங்கமாகும்.

ஹுஸூர் அவர்கள் நிறுவிய திட்டங்களில் ஒன்று ‘மனிதம் முதலில்’ என்ற ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். இது இன, மத, நிற வேறுபாடின்றி மனித இனத்திற்கு உதவும் ஓர் அமைப்பாகும். 1992-ஆம் ஆண்டில், முன்னாள் யூகோஸ்லாவியா பகுதியில் குறிப்பாக பால்கனில் போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு பாதுகாப்புக் குழுக்கள் அனுப்பப்பட்டன. இதன் விளைவாக உறைவிடமற்ற பல அகதிகளுக்கு உணவு, மருந்து மற்றும் உடைகள் வழங்கப்பட்டன. இந்த தொண்டு நிறுவனம் இப்போது உலகம் முழுவதும் 60-க்கும் மேற்பட்ட நாடுகளில் நிறுவப்பட்டுள்ளது. குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளில் இலட்சக்கணக்கான மக்களுக்கு மனிதநேய தொண்டாற்றி வருகிறது.

உலகில் அமைதியை எவ்வாறு அடைவது என்பது குறித்து அன்னார் மிக விரிவாக எடுத்துக் கூறியுள்ளார்கள். 1990-ஆம் ஆண்டு வளைகுடா போரின்போது, ஹுஸூர் (ரஹி) இஸ்லாத்தில் சமத்துவத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிக் கூறினார்கள்: “அவர்கள் உண்மையிலேயே உலக அமைதியை விரும்பினால், எனது ஆலோசனையின்படி, அவர்கள் நீதியில் நிலைநிற்பவர்களாக ஆக வேண்டும் கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையிலோ அல்லது வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையிலோ வேறுபாடு பாராட்டாத இஸ்லாத்தின் நீதியில் நிலைநிற்க வேண்டும். இஸ்லாம் இறைவனைக் கருத்தில் கொண்டு நீதி மற்றும் நியாயம் என்ற கருத்தை முன்வைக்கிறது. இந்த அளவுகோலின் படி அவர்கள் தங்கள் கருத்து வேறுபாடுகளையும் உலகின் கருத்து வேறுபாடுகளையும் தீர்க்க முயற்சித்தால், பிறகு உலகில் அமைதியை அடைய முடியும் என்றுநான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன்.”

அன்னார் இறைநேசம், கருணை மற்றும் மனித குலத்திற்கு சேவை செய்தல் ஆகிய நற்குணங்களின் தடத்தை விட்டுச் சென்றுள்ளார்கள், இதன் காரணமாக அன்னார் ஓர் இறை மனிதர் என்ற பட்டத்தாலும் அறியப்படுகிறார்கள்.

22 ஏப்ரல் 2003 அன்று ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது ஐந்தாவது கலீ∴பாவாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அனைவரும் இன்பம் மற்றும் நிம்மதியால் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கையில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் வரலாற்றின் இந்த புதிய அத்தியாயத்தில் அதிகமதிகமாக துஆவில் கவனம் செலுத்துமாறு ஜமாஅத்திற்கு அறிவுரை வழங்கினார்கள்.

“இந்தத் தருணத்தில் ஜமாஅத்திடம் எனக்கு ஒரு வேண்டுகோள் உள்ளது. துஆவில் மிக அதிகமாக அழுத்தம் கொடுங்கள். துஆ செய்யுங்கள்; துஆ செய்யுங்கள்; அதிகமாக துஆ செய்யுங்கள்; அதிகமாக துஆ செய்யுங்கள்.”

உலகெங்கிலும் அமைதிக்கான தூதுச் செய்தியைக் கொண்டு வர வேண்டும் என்பதே அன்னாரது துஆக்களின் நோக்கமாக இருந்தது. இன்று அன்பிற்குரிய ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் அமைதி மற்றும் மார்க்க நல்லிணக்கத்தை வளர்க்கின்ற உலகின் முன்னணி முஸ்லிம்

ஆளுமையாகக் கருதப்படுகிறார்கள். தமது பேருரைகள், சொற்பொழிவுகள், புத்தகங்கள் மற்றும் தனிப்பட்ட சந்திப்புகள் மூலம் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் எல்லாம் வல்ல அல்லாஹ்வை வணங்குவது மற்றும் மனித இனத்திற்குத் தொண்டாற்றுவது ஆகியவற்றைத் தொடர்ந்து முன்வைத்துள்ளார்கள். உலகளாவிய மனித உரிமைகள் மற்றும் நீதியின் அடிப்படையிலான ஒரு சமூகம் ஆகியவற்றை நிறுவுதல், மார்க்கம் மற்றும் அரசியல் நிர்வாகத்தைப் பிரித்தல் ஆகிய கருத்துக்களையும் தொடர்ந்து ஆதரித்து பரப்பி வருகிறார்கள்.

ஐந்தாவது கிலா∴பத்தின் இந்த அருளுக்குரிய காலகட்டத்தில், ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் அமைதி மற்றும் ஒற்றுமைக்கான இஸ்லாமிய போதனைகளைக் குறித்து பேசும் வாய்ப்பை எந்தவொரு தருணத்திலும் தவறவிட்டதில்லை. அதாவது பாராளுமன்றங்கள், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் வாஷிங்டனில் உள்ள கேபிடல் ஹில் ஆகிய அனைத்து இடங்களிலும் அன்னார் இது குறித்து பேசியுள்ளார்கள். அன்னாரது சொற்கள் மற்றும் செயல்கள் அமைதியின் மனிதர் என்ற அவர்களது பட்டத்திற்கு மிகப் பொருத்தமாக உள்ளன.

டிசம்பர் 4, 2012-ல் பிரஸ்ஸல்ஸில் உள்ள ஐரோப்பிய பாராளுமன்றத்தில், பாராளுமன்றத்தின் தலைவர் உட்பட 30 நாடுகளிலிருந்து பிரதிநிதிகளாக வந்திருந்த 350-க்கும் மேற்பட்ட விருந்தினர்கள் முன்னிலையில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் வரலாற்று முக்கியத்தும்




மிக்க ஒரு சிறப்புரை நிகழ்த்தினார்கள். இந்த உரையின் போது, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் ஐரோப்பிய ஒன்றியம் தனது ஒற்றுமையைப் பாதுகாக்க வேண்டும் என்றும் சர்வதேச உறவுகளில் சமத்துவத்தையும் நீதியையும் பேண வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

பிப்ரவரி 11, 2014-ல் இலண்டனில் உள்ள கில்ட் ஹாலில் நடைபெற்ற உலகளாவிய சர்வ சமய மாநாட்டில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள். இந்த உரையின் போது, திருக்குர்ஆனின் போதனைகள் மற்றும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வாழ்க்கை ஆகியவற்றின் அடிப்படையில் பரஸ்பர புரிதல், சகிப்புத்தன்மை மற்றும் கண்ணியத்தை மேம்படுத்தவதில் இஸ்லாமிய மார்க்கத்தின் ஈடுபாட்டை கோடிட்டுக் காட்டினார்கள்.

ஒவ்வொரு உரையின் வாயிலாகவும், அணு ஆயுதப் போரின் அபாயத்தை ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள்: "சில காலம் முன்பு வரை அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்படும் என்று மிரட்டல் விடுப்பது கற்பனைக்கு அப்பாற்பட்டதாகக் கருதப்பட்டது. ஆனால் தற்போது அத்தகைய மிரட்டல்கள் விடுப்பது தினசரி வாடிக்கையாகி விட்டது. ஓர் உலகளாவியப் போர் மூளுமானால் அது இதுவரை உலகம் கண்டிராத வகையில் இருக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. நிச்சயமாக, அதன் பேரழிவு மற்றும் நாச விளைவுகள் நம் புரிதலுக்கு அப்பாற்பட்டவை. பல நாடுகள் ஒரே தாக்குதலில் ஆயிரக்கணக்கான மக்களைக் கொல்லும் பயங்கர ஆற்றல் கொண்ட அதிநவீன ஆயுதங்களைப் பெற்றுள்ளன. நாம் மட்டும் வலியை அனுபவித்து வருந்துபவர்களாக இருக்க மாட்டோம். மாறாக நம் குழந்தைகளும் வருங்கால சந்ததியினரும் நமது குற்றங்களுக்காக துன்புறுவார்கள். மேலும் அவர்களின் தவறு ஏதுமின்றி அவர்களின் வாழ்க்கை அழிக்கப்படும்."

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் வழிகாட்டுதலின் கீழ், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் உலகின் தொலை தூரப் பகுதிகளில் உயர்தர வசதிகளை வழங்கும் பல பள்ளிகளையும் மருத்துவமனைகளையும் கட்டியுள்ளது. பல்வேறு திட்டங்கள் மூலம் ஜமாஅத் உலகெங்கிலும் உள்ள ஏராளமான தாழ்த்தப்பட்ட மாணவர்களின் கல்விக்கான பொருளுதவியை அவர்களது மார்க்கப் பின்னணியைப் பொருட்படுத்தாமல் செய்துள்ளது.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் சர்வதேச உறவுகளின் நிலை குறித்து பெரும் கவலையை வெளிப்படுத்தியுள்ளார்கள். மேலும் இதன் அடிப்படையில் அன்னார் இஸ்ரேல், ஈரான், அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ் மற்றும் இன்னும் பல நாடுகளின் அதிபர்கள் உட்பட பல்வேறு உலகத் தலைவர்களுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார்கள். உலகளாவிய மோதல்கள் தொடர்பாக அமைதிப் பேச்சு வார்த்தைகளின் முக்கியத்துவத்தைப் பற்றி ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) தம்முடைய கடிதங்களில் ஒன்றில் இவ்வாறு கூறுகிறார்கள்: "உலகத்தை ஓர் உலகப் போரின் பிடிக்குள் அழைத்துச் செல்வதற்குப் பகரமாக, ஓர் உலகப் பேரழிவிலிருந்து உலகைக் காப்பாற்ற அதிகபட்ச முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என நான் உங்களிடம் வேண்டுகோள் விடுக்கிறேன். அதிகாரத்தைக் கொண்டு சச்சரவுகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக, பேச்சுவார்த்தை மூலம் அவற்றைத் தீர்க்க நீங்கள் முயற்சிக்க வேண்டும். இதன் மூலமாக நமது வருங்கால சந்ததியினருக்கு உடல் ஊனம் மற்றும் குறைபாடுகளைப் பரிசாக வழங்குவதற்குப் பதிலாக ஓர் ஒளிமயமான எதிர்காலத்தைப் பரிசளிக்க முடியும்."

ஒரு வேளாண் நிபுணர் என்ற முறையில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள், உணவு, சுத்தமான நீர் மற்றும் மின்சாரம் ஆகியவற்றை எளிதாகப் பெறுவதற்கு உதவுவதன் மூலம் வளரும் நாடுகளின் துன்பத்தைப் போக்குவதில் குறிப்பிட்ட ஆர்வம் செலுத்துகிறார்கள். உலகின் தொலைதூரப் பகுதிகளில் பல்வேறு மனிதநேய மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களில் ஈடுபட்டுள்ள சர்வதேச அஹ்மதி கட்டிடக் கலைஞர்கள் மற்றும் பொறியாளர்கள் (IAAAE) அமைப்பின் பணிகளை அன்னார் மேற்பார்வை இடுகிறார்கள். சமீபத்தில், ∴புர்கினோபாஸோவில் மஸ்ரூர் சர்வதேச தொழில் நுட்பக் கல்லூரி நிறுவப்படத் தயாராக உள்ளது. இந்த நிறுவனத்தின் முக்கிய நோக்கம் இளைஞர்களுக்குப் பயிற்சி அளிப்பதுடன், அவர்களுக்குத் தேவையான திறன்களை வளர்த்து, ஒரு கண்ணியமான வாழ்க்கையை உருவாக்கிக் கொள்வது மட்டுமல்லாமல், தத்தமது சமூகத்தின் பயனுள்ள உறுப்பினராக இருக்கவும்,

தமது சொந்தத்திறன் மற்றும் ஆற்றலின் அடிப்படையில் வருமானம் ஈட்டவும் உதவி புரிவதாக இருக்கும்.

2004-ஆம் ஆண்டில், ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் தேசிய அமைதிக் கருத்தரங்கைத் தொடங்கினார்கள். ஆண்டிற்கு ஒருமுறை நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் அனைத்துத் துறைகள் சார்ந்த விருந்தினர்-களும் ஒன்று கூடி அமைதி மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவது குறித்த கருத்துகளைப் பரிமாறிக் கொள்கின்றனர். ஒவ்வோர் ஆண்டும் இந்தக் கருத்தரங்கில் பல அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல்வாதிகள், மார்க்கத் தலைவர்கள் மற்றும் பிற பெருந்தகைகள் கலந்து கொள்கின்றனர். 2009-ஆம் ஆண்டில், ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் ஆண்டு தோறும் வழங்கப்படுகின்ற ‘அமைதியின் முன்னேற்றத்திற்கான அஹ்மதிய்யா முஸ்லிம் பரிசையும்’ தொடங்கி வைத்தார்கள். இந்தப் பரிசு, அமைதி மற்றும் மனிதநேயத்திற்கான ஓர் அசாதாரண அர்ப்பணிப்பு மற்றும் சேவையை வெளிப்படுத்திய தனிநபர்கள் அல்லது அமைப்புகளுக்கான சர்வதேச அமைதிக்கான ஒரு விருதாகும்.

பல உலகத் தலைவர்கள் ஹுஸுரே அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் மகத்தான முயற்சிகளைப் பாராட்டி அன்னாருக்கு அமைதியின் மனிதர் என்ற பட்டத்தை வழங்கியுள்ளனர்.

ஹவுஸ் ஆ∴ப் லார்ட்ஸின் முன்னாள் உறுப்பினரும் மனித உரிமை ஆதரவாளருமான லார்டு அவ்பரி ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களைப் பற்றி கனிவுடன் பேசினார்: “ஹுஸுர் அவர்கள் வழங்கும் தார்மீக தலைமையும் வழிகாட்டலும் எங்களுக்கு மிகவும் தேவை...”

பிரதிநிதிகள் சபையின் 52-வது சபாநாயகரான நான்சி பெலோசி, அன்பிற்குரிய ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) பற்றி பின்வருமாறு கூறினார்: “உங்கள் நம்பிக்கைகளுக்காக நீங்கள் துன்புறுத்தப்பட்டீர்கள். உங்கள் நம்பிக்கைக்காக சிறையில் அடைக்கப்பட்டீர்கள். உங்கள் தாயகத்திலிருந்து நாடு கடத்தப்பட்டீர்கள். ஆனால் நீங்களோ வெறுப்பு மற்றும் பழிவாங்குதலின் பக்கம் திரும்ப மறுத்து விட்டீர்கள். நீங்கள் ஞானமும் நல்லிணக்கமும் கொண்ட ஒரு தலைவர் ஆவீர்கள். மேலும் அகிம்சை மற்றும் மார்க்கங்களுக்கிடையே கண்ணியத்தைக் கடைபிடித்தல் ஆகியவற்றைப் போதிக்கின்ற ஒரு தலைவர் ஆவீர்கள்....

...முஸ்லிம்கள் மத்தியில் கூட வன்முறை மற்றும் சகிப்புத்தன்மை பற்றி நீங்கள் பேசுகிறீர்கள். ஏனென்றால் தேவாலயங்கள் மற்றும் மடாலயங்களை அழிக்க அழைப்பு விடுப்பது மனித உரிமைகளை மீறுவதாகும்.

நீங்கள் உங்கள் பிரச்சாரத்தை எங்கள் நாடு முழுவதும் கொண்டு சென்றிருக்கிறீர்கள் - நீங்கள் நீதிக்கான குரல் மற்றும் அமைதிக்கான உந்துதலாக செயல்படுகிறீர்கள். இது அமெரிக்காவிற்கு ஒரு தெளிவான மற்றும் அசைக்க முடியாத விசுவாசத்தைக் காட்டுகிறது.

...இந்தச் செய்திகளும் செயல்களும் இந்த ஜமாஅத்தின் வலிமையையும், மனித குலத்திற்கான அதன் அர்ப்பணிப்பையும் பிரதிபலிக்கின்றன.”

கனடாவின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, முழு சமுதாயத்திலும் அமைதியை மேம்படுத்த ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளைப் பற்றிப் பாராட்டிக் கூறியதாவது: “ஹுஸுர் அவர்களே! உங்கள் நட்பு மற்றும் தலைமை கனடாவுக்கு மிகவும் முக்கியமானது. மேலும் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் அனைத்து வகையான தீவிரவாதத்தையும் கண்டிக்கும் விதத்தை நாங்கள் பாராட்டுகிறோம்.”





இஸ்லாத்தின் அமைதியான தூதுச் செய்தியை உலகெங்கும் பரப்புவதை உறுதி செய்வதும் ஜமாஅத்தின் கடமையாகும் என்பதை ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் தமது ஜமாஅத்திற்கு தொடர்ந்து நினைவுபடுத்தியுள்ளார்கள். 2015-ஆம் ஆண்டு யு.கே. ஆண்டு மாநாட்டில் தமது உரையின் போது, ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் அறிவுறுத்தினார்கள்: “இன்று, ஒவ்வோர் அஹ்மதியின் கடமை என்னவென்றால், நீதியை நிலைநிறுத்த வேண்டும் மற்றும் பிறருக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற கட்டளையைத் தாம் செயல்படுத்துவதுடன், இந்தச் செய்தியை அவர்கள் உலகின் ஒவ்வொரு நபருக்கும் தெரிவிக்க வேண்டும். இந்தக் காலகட்டத்தில் எல்லாம் வல்ல இறைவனால் அனுப்பப்பட்டவரின் பக்கம் செவிசாய்க்குமாறு அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.”

கிலா∴பத் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகிறது. மேலும் சமூக அமைதியின்மை மற்றும் வேற்றுமைகளின் காலகட்டத்தில் தனது ஆரம்ப காலத்தில் எவ்வாறு இருந்ததோ அவ்வாறே இப்போது அமைதியின் கலங்கரை விளக்கமாக நிற்கிறது. இது உண்மையிலேயே எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருட்கொடையாகும். உலகெங்கிலும் ஆன்மிக வழிகாட்டுதலையும் அமைதியையும் பெறுவதற்கு கிலா∴பத்தின் கயிற்றை வலுவாகப் பிடித்துக் கொள்வது ஒவ்வோர் அஹ்மதி முஸ்லிமின் கடமையாகும்.

நமது அன்பிற்குரிய ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் எழுதிய ஒரு துஆவுடன் எனது உரையை நிறைவு செய்கிறேன்: “நமது வருங்கால சந்ததியினர் வெறுப்புடனும் கோபத்துடனும் நம்மை நினைவு கூருவதற்குப் பகரமாக அன்புடனும் நேசத்துடனும் நம்மை நினைவுகூரட்டுமாக. ஒவ்வொரு நபரும் ஒவ்வொரு நாடும் ஒருவர் மற்றவருக்கான உரிமைகளை நிறைவேற்ற முன்வரட்டுமாக! மேலும் அனைத்து வகையான அநீதி மற்றும் மோதல்கள் மீதும் நீதியும் கருணையும் மேலோங்கட்டுமாக.” ஆமீன்.

# சிறுவர் பகுதி

# மார்க்க அறிவுப் புத்தகம்




தமிழாக்கம்: M.M. இப்ராஹீம்

## 4. அஹ்மதிய்யத்

76. ஹஸ்ரத் இரண்டாவது கலீபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஜமாஅத்தின் உறுப்பினர்களை வயதின் அடிப்படையில் எவ்வாறு ஐந்து பிரிவுகளாகப் பிரித்தார்கள்? விவரிக்க:

ஐந்து பிரிவுகள் கீழ்வருமாறு:

1) மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் (40 வயதிற்கு மேற்பட்டவர்கள்)
2) மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா (15 வயது முடிந்து 40 வயதிற்குட்பட்டவர்கள்)
3) அத்ஃபாலுல் அஹ்மதிய்யா (15 வயதிற்குட்பட்ட சிறுவர்கள்)
4) நாஸிராத்துல் அஹ்மதிய்யா (15 வயதிற்குட்பட்ட சிறுமிகள்)
5) லஜ்னா இமாயில்லாஹ் (15 வயதிற்கு மேற்பட்டவர்கள்)

77. குத்தாமுல் அஹ்மதிய்யா அமைப்பிற்கான உறுதி மொழியைக் கூறுக:

அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு.

மார்க்க, சமுதாய, இயக்க நன்மைக்காக நான் என்னுடைய உயிர், பொருள், காலம் மற்றும் கௌரவத்தினை தியாகம் செய்யத் தயாராக இருக்கின்றேன் என்றும் அஹ்மதிய்யா கிலாஃபத்தினை நிலைநாட்ட எல்லா விதமான தியாகங்களைச் செய்ய தயாராக இருக்கின்றேன் என்றும் அவ்வப்போதைய கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் என்னென்ன நல்ல தீர்மானங்கள் எடுக்கின்றார்களோ அதற்குக் கட்டுப்படுவதை எனது கடமையாகக் கருதுகிறேன் என்றும் உறுதி கூறுகின்றேன் - இன்ஷா அல்லாஹ்.

78. அத்ஃபாலுல் அஹ்மதிய்யா அமைப்பிற்கான உறுதி மொழியைக் கூறுக:

அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு.

இஸ்லாத்திறகாகவும், அஹ்மதிய்யத்திற்காகவும் சமுதாயம் மற்றும் நாட்டிற்காகவும் சேவை செய்ய எப்போதும் தயாராக இருப்பேன் என்றும், எப்போதும் உண்மையே பேசுவேன் என்றும், எவரையும் ஏசமாட்டேன் என்றும், கலீபத்துல் மஸீஹ் அவர்களின் அனைத்து அறிவுரைகளின்படியும் செயலாற்ற முயற்சி செய்வேன் என்றும் நான் உறுதி கூறுகின்றேன் - இன்ஷா அல்லாஹ்.

79. அன்ஸாருல்லாஹ் அமைப்பிற்கான உறுதி மொழியைக் கூறுக:

அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு.

இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் உறுதிப்பாட்டிற்காகவும் அதை பரப்புவதற்காகவும் கிலாஃபத் அமைப்பை பாதுகாப்பதற்காகவும் இன்ஷா அல்லாஹ் இறுதி மூச்சு வரை அயராது பாடுபடுவேன் என்றும், இதற்காக பெரும் பெரும் தியாகங்களைச் செய்ய எப்போதும் தயாராக இருப்பேன் என்றும், நான் எனது சந்ததிகளையும் எப்போதும் கிலாபத்துடன் இணைந்திருக்குமாறு வலியுறுத்தி வருவேன் என்றும் நான் உறுதி கூறுகிறேன் - இன்ஷா அல்லாஹ்.

80. லஜ்னா இமாயில்லாஹ் அமைப்பிற்கான உறுதி மொழியைக் கூறுக:

அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு.

நான் மார்க்க, சமுதாய நன்மைக்காக எனது உயிர், பொருள், காலம் மற்றும் எனது சந்ததிகளையும் தியாகம் செய்ய எல்லா நேரமும் தயாராக இருக்கிறேன் என்றும், உண்மையை நிலைநாட்டுவதற்கும் அஹ்மதிய்யா கிலாஃபத்தினை நிலைநாட்டுவதற்கும் எல்லா விதமான தியாகங்களும் செய்ய தயாராக இருக்கிறேன் என்றும், கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் என்னென்ன தீர்மானங்கள் செய்கிறார்களோ அதற்குக் கட்டுப்படுவதை கடமையாகக் கருதுகிறேன் என்றும் உறுதி கூறுகின்றேன்.

81. நாஸிரத்துல் அஹ்மதிய்யா அமைப்பிறகான உறுதி மொழியைக் கூறுக:

அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு.

எனது மார்க்கத்திற்காகவும், சமுதாயத்திற்காகவும், நாட்டிற்காகவும் தொண்டு செய்ய எல்லா நேரமும் ஆயத்தமாக இருப்பேன் எனவும், எப்பொழுதும் உண்மையில் நிலைத்திருப்பேன் எனவும், அஹ்மதிய்யா கிலாஃபத்தினை நிலைநிறுத்துவதற்காக எல்லா தியாகத்தையும் செய்ய ஆயத்தமாக இருப்பேன் எனவும் நான் உறுதி கூறுகிறேன் - இன்ஷா அல்லாஹ்.

82. மஜ்லிஸே மஷாவரத் குறித்து எழுதுக:

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மத்திய செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அடங்கிய ஒரு அமைப்பாகும். இந்த அமைப்பு ஆண்டுக்கு ஒருமுறை கூடி ஆண்டு வரவு செலவுத் திட்டம் (Annual Budget) மற்றும் இதர முக்கிய விஷயங்கள் குறித்து தங்களது முடிவுகளை கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் ஒப்புதலுக்காக பரிந்துரைக்கும்.

83. 1947-ல் இந்தியா-பாகிஸ்தான் பிரிவினையின்போது ஜமாஅத்தின் தலைமையகம் காதியானிலிருந்து எங்கு மாற்றப்பட்டது?

அது தற்காலிகமாக பாகிஸ்தானிலுள்ள லாஹூருக்கு மாற்றப்பட்டது. பின்னர் லாஹூரிலிருந்து 100 மைல்கள் தொலைவிலுள்ள சினியோட்டிற்கு அருகே சிறிது இடம் வாங்கப்பட்டு செனாப் நதிக்கரையில் ரப்வா என்ற ஒரு புதிய நகரம் நிர்மாணிக்கப்பட்டு, அங்கு மாற்றப்பட்டது.

84. ரப்வா எப்போது யாரால் அடிக்கல் நாட்டப்பட்டது?

1948-ஆம் ஆண்டு செப்டம்பர் 20-ஆம் தேதி ஹஸ்ரத் இரண்டாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

85. 1947-ல் ஹிஜ்ரத் நிகழ்ந்தபோது இந்தியாவில் தங்கியோர் எத்தனை பேர்?

இந்தியாவில் காதியானின் புனிதத்தலங்களைக் காக்கும் பொருட்டு 313 அஹ்மதிகள் தங்கி விட்டனர். இவர்கள் தர்வேஷ்கள் என்றழைக்கப்பட்டனர்.

86. '∴பஸ்லே உமர்' என்று அழைக்கப்பட்டவர் யார்?

ஹஸ்ரத் இரண்டாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களே ∴பஸ்லே உமர் என்று அழைக்கப்பட்டார்கள்.

87. ஹஸ்ரத் இரண்டாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் எப்போது இங்கிலாந்து சென்றார்கள்?

1924-ஆம் ஆண்டு இங்கிலாந்தில் வெம்பர்க்கில் நடைபெற்ற காமன்வெல்த் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இங்கிலாந்து சென்றார்கள்.

88. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் துணைவியார் ஹஸ்ரத் நுஸ்ரத் ஜஹான் சாஹிபா (ரலி) எப்போது காலமானார்கள்?

1952-ஆம் ஆண்டு ஏப்ரல் 20-ஆம் தேதி தமது 86-வது வயதில் காலமானார்கள்.

89. ஹிஜ்ரி ஷம்ஸி காலண்டரை யார் துவங்கினார்கள்?

ஹஸ்ரத் இரண்டாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் துவங்கினார்கள்.

90. ஹிஜ்ரி ஷம்ஸி காலண்டரின் மாதங்களை கிறிஸ்தவக் காலண்டரின் மாதங்களுடன் ஒப்பிடுக:

| கிறித்தவக் காலண்டர் | ஹிஜ்ரி ஷம்ஸி காலண்டர் |
|---|---|
| ஜனவரி | ஸுலஹ் |
| பிப்ரவரி | தப்லீக் |
| மார்ச் | அமான் |
| ஏப்ரல் | ஷஹாதத் |
| மே | ஹிஜ்ரத் |
| ஜூன் | இஹ்ஸான் |
| ஜூலை | வ∴பா |
| ஆகஸ்டு | ஸஹூர் |
| செப்டம்பர் | தபூக் |
| அக்டோபர் | இகா |
| நவம்பர் | நுபுவ்வத் |
| டிசம்பர் | ∴பதஹ் |

91. ஹஸ்ரத் இரண்டாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் எப்போது இறைவனடி சேர்ந்தார்கள்?

1965-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ஆம் தேதி இரவு 2.20 மணிக்கு இறைவனடி சேர்ந்தார்கள். அவர்கள் பஹிஷ்தி மக்பராவில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

92. ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்களின் மறைவிற்குப் பின் அடுத்த கலீ∴பாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?

ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்களின் மூத்த மகனான ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மது அவர்கள் மூன்றாவது கலீ∴பாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

93. மூன்றாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் எப்போது பிறந்தார்கள்?

1909-ஆம் ஆண்டு நவம்பர் 16-ஆம் தேதி பிறந்தார்கள்.

94. எந்த வயதில் அவர்கள் திருக்குர்ஆனை மனனம் செய்தார்கள்?

தமது 13-வது வயதில் திருக்குர்ஆன் முழுவதும் மனனம் செய்தார்கள்.

95. கமருல் அன்பியா என்று அழைக்கப்பட்டவர் யார்?

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு மகனான ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது (ரலி) அவர்கள் கமருல் அன்பியா என்றழைக்கப்பட்டாகள்.

96. ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது (ரலி) அவர்கள் எழுதிய இரு நூல்களைக் கூறுக:

1) ஹமாரா குதா (Our God)
2) ஸீரத் காத்தமுன்னபிய்யீன் (The Life and Character of the seal of Prophet[sa])

97. மூன்றாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களால் துவங்கப்பட்டட சில திட்டங்கள் யாவை?

1) ∴பஸ்லே உமர் ∴பவுண்டேஷன் திட்டம்
2) நுஸ்ரத் ஜஹான் திட்டம்
3) வக்∴பே ஆர்ஸி திட்டம்
4) அஹ்மதிய்யா நூற்றாண்டு விழா (ஜூபிளி) திட்டம்

98. ∴பஸ்லே உமர் ∴பவுண்டேஷன் திட்டத்தின் நோக்கம் யாது?

இத்திட்டம் ஹஸ்ரத் இரண்டாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் நினைவாக ஏற்படுத்தப்பட்ட -தாகும். மார்க்க ஆராய்ச்சி, சமூகத்தின் கல்வி, பொருளாதார உயர்வு ஆகியன இதன் நோக்கங்களாகும்.

99. நுஸ்ரத் ஜஹான் திட்டத்தின் நோக்கங்கள் யாவை?

நலிவடைந்த ஆப்ரிக்க நாடுகளில் பள்ளிக் கூடங்கள் மற்றும் மருத்துவமனைகளை நிறுவுவதும் அவற்றை மேம்படச் செய்வதும் இதன் நோக்கங்களாகும்.

100. வக்∴ப ஆர்ஸி திட்டத்தின் நோக்கங்கள் யாவை?

இத்திட்டத்தின் கீழ் ஒருவர் சில நாட்களுக்கு தன்னை தற்காலிகமாக அர்ப்பணித்து ஜமாஅத்தின் உறுப்பினர் -களுக்கு இஸ்லாம், மார்க்க அறிவு, திருக்குர்ஆன், அஹ்மதிய்யத் போன்றவற்றைக் கற்றுக் கொடுக்க வேண்டும். இதில் செல்பவர் தமக்கு ஆகும் செலவுகளைத் தாமே பார்த்துக் கொள்ள வேண்டும்.

(தொடர்ச்சி 21-ஆம் பக்கம்...)

# காதியானும் அதன் புனித, வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களும்

தொகுப்பு: மவ்லானா முஹம்மது ஹமீது கவ்ஸர்
(அஹ்மதிய்யத் வரலாற்றுத் துறையின் பொறுப்பாளர், காதியான்)

9

தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A.,

## வரைபடங்கள்

தற்காலத்தில் வரைபடங்கள் மூலமாக வரலாற்றுச் சிறப்புள்ள இடங்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கான கவனம் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே செல்கின்றது. வெளிநாடுகளிலிருந்து வருகின்ற மதிப்பிற்குரிய விருந்தினர்கள் வரலாற்றுச் சிறப்புள்ள, புனிதமான இடங்களின் பழைய வரைபடங்களைக் கேட்கின்றனர். அதன்படி, அடுத்த பக்கங்களில் ஜமாஅத்தின் வரலாற்று நூல்களில் அச்சடிக்கப்பட்ட வரைபடங்களிலிருந்து சில எடுத்து வைக்கப்படுகின்றன.

### அஸ்ஹாபே அஹ்மது தொகுதி 1 நூலின் இணைப்பில் உள்ள வரைபடம்

(வரைபடத்தை உருது நூல் பதிப்பு டிசம்பர் 2015 பக்கம் 87-ல் உள்ளதைப் பார்த்து தெரிந்து கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்)

### வரைபடம் 2 அத்தார் என்பதில் உள்ள பகுதி பற்றிய விபரம்

(வரைபடத்தை உருது நூல் பதிப்பு டிசம்பர் 2015 பக்கம் 89-ல் உள்ளதைப் பார்த்து தெரிந்து கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்)

வரைபடத்திலுள்ள எண்: 1 ஹஸ்ரத் இரண்டாவது கலீ.ஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் பிறந்த அறை. பிறப்பு ஜனவரி 12, 1889

வரைபடத்திலுள்ள எண்: 2 பைத்துல் .ஃபிக்ர் மேற் -கூரையின் கீழுள்ள ஓர் அறை.

வரைபடத்திலுள்ள எண்: 3 வீதி. அதில் இப்போது முபாரக் மஸ்ஜிது கட்டப்பட்டுள்ளது.

வரைபடத்திலுள்ள எண்: 4 வட்டமான அறை.

வரைபடத்திலுள்ள எண்: 5 மிர்ஸா இமாமுத்தீன், மிர்ஸா நிஸாமுத்தீன் ஆகியோர் எழுப்பிய சுவர். அதனால் முபாரக் மஸ்ஜிதுக்கு அஹ்மதிகள் வருவதும், செல்வதும் தடைபட்டு விட்டது. மேலும் நீதிமன்றத்தின் கட்டளையினால் தகர்க்கப்பட்டது. (ஹகீகத்துல் வஹீ பக்கம் 266 மற்றும் 271 காண்க).

வரைபடத்திலுள்ள எண்: 6 இங்கு மிர்ஸா இமாமுத்தீன், மிர்ஸா நிஸாமுத்தீன் ஆகியோரின் தரிசு நிலம் இருந்தது. அது 1907-ஆம் ஆண்டில் அவர்களிடமிருந்து விலைக்கு வாங்கி அலுவலகம் கட்டப்பட்டது. மேலும் மேலே முபாரக் மஸ்ஜிதின் முதல் விரிவாக்கம் செய்யப்பட்டது.

### வரைபடம் 3 பற்றிய விபரம்

“பைத்துல்.ஃபிக்ர் மற்றும் பைத்துஸ் ஸிக்ர் பற்றிய இல்ஹாம்:

....... وَمَنْ دَخَلَهُ كَانَ آمِنًا (வமன் தகலஹு கான ஆமினா).

பொருள்: (மஸ்ஜித் ஆகிய) இதில் மக்களுக்கு அருள்கள் இருக்கின்றன. மேலும் எவர் இதில் நுழைவாரோ, அவர் அமைதியில் வந்து விடுவார்.



“எவர் இந்த ‘பைத்துஸ் ஸிக்ர்’-ல் (அதாவது முபாரக் மஸ்ஜிதில்) கலப்பற்ற தன்மையுடனும், குறிக்கோளுடனும், இறைவணக்கம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடனும், நல்ல நிய்யத்துடனும், அழகிய ஈமானுடனும் நுழைவாரோ, அவர் தீய முடிவை அடைவதிலிருந்து பாதுகாப்பில் வந்து விடுவார்.”.......... (இது தொடர்பான மற்ற இல்ஹாம்களுக்கு சகோதரர்கள் பராஹீனே அஹ்மதிய்யா தொகுதி 4 பக்கம் 557-559 மற்றும் மக்தூபாத்தே அஹ்மது தொகுதி 1 பக்கம் 55 ஆகியவற்றில் காண்க - நூலாசிரியர்).

1. பைத்துல் .ஃபிக்ர்

2. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தாருல் மஸீஹிலிருந்து முபாரக் மஸ்ஜிதின் மாடிக்கு வந்து சென்று கொண்டிருந்த மரத்தாலான ஏணிப்படி.

3. பைத்துஸ் ஸிக்ர் (அதாவது முபாரக் மஸ்ஜிதின்) அறை. இதில் மேற்கு மற்றும் வடக்குப் புறத்தில் இரண்டு ஜன்னல்கள் இருந்தன. அவை இன்றும் அதன் அசல் நிலையிலேயே இருக்கின்றன.

4. பைத்துஸ் ஸிக்ரின் முதல் அறையை ஓர் அறை இன்னோர் அறையுடன் இணைத்தவாறு இருந்தது. முதலாவது மற்றும் இரண்டாவது அறைக்கு இடையில் நடுத்தரமான அளவுள்ள ஒரு கதவு இருந்தது. பைத்துல் ∴பிக்ரிலிருந்து ஒரு ஜன்னல் (அது இப்போது வரை அசல் நிலையிலேயே இருக்கிறது) பைத்துஸ் ஸிக்ரின் முதல் அறையில் திறக்கும் வகையில் இருந்தது. அதன் மூலமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் முபாரக் மஸ்ஜிதுக்கு வந்து சென்று கொண்டிருந்தார்கள். தெற்கு திசையிலுள்ள ஜன்னல் மிர்ஸா இமாமுத்தீன், மிர்ஸா நிஸாமுத்தீன் ஆகியோருக்கு சொந்தமான தரிசு நிலத்தின் பக்கம் திறக்கக் கூடியதாக இருந்தது.

5. பைத்துஸ் ஸிக்ரின் இரண்டாவது அறை. இதில் தெற்கு திசையில் ஒரு ஜன்னல் இருந்தது. அது மேலே குறிப்பிடப்பட்ட தரிசு நிலத்தின் பக்கம் திறக்கக் கூடியதாக இருந்தது.

5a. பைத்துஸ் ஸிக்ரின் இரண்டாவது அறையிலிருந்து கீழே வீதி வரை சென்று கொண்டிருந்த ஏணிப்படிகள் இன்றுவரை அதன் அசல் நிலையில் அப்படியே இருக்கின்றன.

5b. இந்த வாயிலிலிருந்து பொதுவாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நடப்பதற்காகச் செல்லும் போது வருவதும் செல்வதுமாக இருந்தது.

5c. இந்த வாயில் மேற்குறிப்பிடப்பட்ட ஏணிப் படிகளின் மூலமாக தாருல் மஸீஹில் திறப்பதாக இருந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய காலத்திற்குப் பிறகு இந்த வாயில் மூடப்பட்டு விட்டது. மேலும் இப்போதுவரை அதன் சட்டகம் (Frame) சுவரில் தென்படுகிறது.

6. சிவப்புத் துளிகள் அடையாளமாக வெளிப்பட்ட அறை. இது முதலில் குளியலறையாக இருந்தது. இதன் வாயில் பைத்துஸ் ஸிக்ரின் இரண்டாவது அறையில் திறக்கக் கூடியதாக இருந்தது. கதவு இன்றுவரை இருக்கிறது. இதன் சட்டகம் (Frame) பழையதாகவே இருக்கிறது. ஆயினும் ஆழிக் கதவு மாற்றப்பட்டு விட்டது. தெற்கு திசையில் ஜன்னல் இருந்தது. அது கொஞ்சம் மாற்றத்துடன் இன்றுவரை அந்த இடத்திலேயே இருக்கிறது. அறையின் கிழக்கு திசையில் நடுத்தரமான அளவைக் கொண்ட ஒரு கதவு வட்டமான அறையின் மேற்கூரையில் திறக்கக் கூடியதாக இருக்கிறது. இந்தக் கதவு முதலில் சிறியதாக இருந்தது. ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய காலத்திலேயே இந்த அறையின் மேற்கூரை உயர்த்தப்பட்டபோது இந்தக் கதவு மாற்றி பெரியதாகப் பொருத்தப்பட்டு விட்டது. அது இப்போதுவரை இருக்கிறது.

7. இங்கு ஐந்து படிகளைக் கொண்ட மரத்தாலான ஏணி இருந்தது. அது சிவப்புத் துளிகள்பட்ட அடையாளத்தையுடைய அறையிலிருந்து வட்டமான அறையில் மேற்கூரை வரை சென்றடைவதற்காக பயன்படுத்தப்பட்டு வந்தது.

8. பைத்துஸ் ஸிக்ரின் இரண்டாவது அறையிலிருந்து சிவப்புத் துளிகள்பட்ட அடையாளத்தைக் கொண்ட அறையிலிருந்து, சற்று கீழே இருந்த வட்டமான அறைக்கு செல்வதற்காக இங்கு இரண்டு படிகளைக் கொண்ட மரத்தாலான ஏணி இருந்தது.

### வரைபடம் எண் 4 பற்றிய விபரம்

எண் 1 முதல் 3 வரை: சய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மேற்கு திசையிலுள்ள ஷஹ் நஷீன் (மன்னர் இருப்பிடம்) எனும் இடத்தில் மக்ரிப் தொழுகைக்குப் பிறகு கூட்டத்தில் அமர்ந்து வந்தார்கள்.

பொதுவாக மவ்லவி அப்துல் கரீம் (ரலி) அவர்கள் அடையாள எண் 2-லும், மவ்லவி நூருத்தீன் (ரலி) அவர்கள் அடையாள எண் 1, 2 ஆகியவற்றிலும், மற்ற சிறப்பான சகோதரர்கள் அடையாள எண் 3-லும் அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இடப் பக்கத்திலும், மற்ற சகோதரர்கள் ஷஹ் நஷீன் (மன்னர் இருப்பிடம்) இடத்தின் தெற்கிலும், கிழக்கிலும் கீழே அமர்ந்திருந்தனர்.

4. இதில் இரண்டு மினாராக்கள் இருந்தன. வட மேற்கு திசையிலுள்ள மினாரா இப்போது வரை அப்படியே சுவற்றில் இருக்கின்றது. ஆனால் தென் மேற்கு திசையிலுள்ள மினாரா முபாரக் மஸ்ஜிது விரிவுபடுத்தப்-பட்ட நேரத்தில் உயரமாக்கப்பட்டு விட்டது.

5. ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் (ரலி) அவர்கள் தங்கியிருந்த அறை. இதன் வடக்கு திசையிலுள்ள முற்றம் ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் (ரலி) அவர்-களுடைய பயன்பாட்டில் இருந்து வந்தது. அறையும், முற்றமும் இப்போது வரை அப்படியே இருக்கின்றன. இங்கு தற்காலிகமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் இருந்து வந்தார்கள்.

6. மரத்தாலான ஏணிப்படி பற்றிய விபரமான பகுதி வரைபட அடையாள 3-ல் எண் 2-ன் கீழ் குறிப்பிடப் -பட்டுள்ளது.

7. அறையில் மவ்லவி முஹம்மது அலீ சாஹிப் அவர்கள் இருந்து வந்தார்கள். إِنِّيْ أُحَافِظُ كُلَّ مَنْ فِي الدَّارِ (இன்னீ உஹா∴பிழு குல்ல மன் ∴பித்தார் - நான் உமது வீட்டில் உள்ள அனைவரையும் காப்பாற்றுவேன்) (தஸ்கிரா பக்கம் 348 காண்க) என்ற இல்ஹாம் தொடர்பான ஓர் அடையாளம் பற்றிய குறிப்பு ஹகீகத்துல் வஹீ நூலில் இறையடையாளம் எண் 103-ல் வருவது இந்த அறையிலேயே வெளிப்பட்டிருந்தது. இந்த அறையின் மேற்கு திசையில் முன்னர் எந்தவொரு கதவும் இல்லாதிருந்தது.

8. இவை இரண்டு மினாராக்கள் ஆகும். இரண்டும் இப்போது வரை அப்படியே இருக்கின்றன. தென் கிழக்கு (மினாரா) தனியாக அப்படியே நிலைபெற்றிருக்கிறது. மேலும் வட கிழக்கிலுள்ள (மினாரா) சுவற்றுக்குள் இருக்கிறது.

9. இங்கு மரத்தால் ஆன இரண்டு ஏணிப்படிகள் இருந்தன. அது சிவப்புத் துளிகள் பட்ட அடையாளத்தின் அறையின் மேற்கூரையிலிருந்து முபாரக் மஸ்ஜிதின் மேல் தளத்திற்கு செல்வதற்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தது.

10. இங்கு ஐந்து படிகளைக் கொண்ட மரத்தால் ஆன ஏணி இருந்தது. அது வட்டமான அறையின் மேல் தளத்திலிருந்து சிவப்புத் துளிகள்பட்ட அறையின் மேற் -கூரைக்கு செல்வதற்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தது.

குறிப்பு: வரைபடம் எண் 3 வகை எண் 7, 8, தற்போது குறிப்பிட்டுள்ள இந்த வகை மற்றும் வகை எண்கள் 9, 10-லில் குறிப்பிடப்பட்டுள்ள ஏணிப்படிகளின் மூலமாக முபாரக் மஸ்ஜிதின் உட்புறமான பகுதியில் இருந்து மஸ்ஜிதின் மேல்தளம் வரை வருவதும், செல்வதும் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

### காதியானிலுள்ள மஹல்லாக்கள் (வட்டாரங்கள்)

காதியானில் ஸ்மால் டவுண் கமிட்டி 1928-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அந்த நேரத்தில் புதிதாக மஹல்லாக்கள் (வட்டாரங்கள்) வரையறுக்கப்பட்டன. இந்தியா பாகிஸ்தான் பிரிவினைக்கு முன்னர் மஹல்லாக்களுக்கு (வட்டாரங்களுக்கு) என்ன பெயர் இருந்தனவோ அந்தப் பெயர்கள் அப்படியே 1966-ஆம் ஆண்டுகள் வரை நிலைபெற்றிருந்தன. அதற்குப் பிறகு முனிசிபல் கமிட்டி மாற்றி புதிய பெயர்களை வைத்தது. அவை கீழே தரப்படுகின்றன.

காதியானிலுள்ள மஹல்லாக்களின் (வட்டாரங்களின்) பெயர்கள்:

| எண் | பிரிவினைக்கு முன் இருந்த பெயர் | மாற்றப்பட்ட பெயர் |
|---|---|---|
| 1. | மஹல்லா தாருர் ரஹ்மத் | மஹல்லா தரம்பூர் |
| 2. | மஹல்லா தாருல் உலூம் மேற்கு மற்றும் மஹல்லா தாருஷ் ஷுக்ர் | மஹல்லா கிருஷ்ணன் நகர் |
| 3. | மஹல்லா தாருல் உலூம் கிழக்கு | மஹல்லா குருநானக் பூரா |
| 4. | மஹல்லா தாருல் ∴பஸ்ல் மற்றும் தாருஸ் ஸன்அத் | மஹல்லா சின்த் நகர் |
| 5. | மஹல்லா தாருல் பரகாத் | மஹல்லா பிரதாப் நகர் |
| 6. | மஹல்லா தாருல் அன்வார் | மஹல்லா சிவில் லைன் |
| 7. | ஷங்காரீ கலீ | ஷங்காரீ கலீ |
| 8. | மஹல்லா பீர் சிராக் ஷாஹ் | பிரேம் நகர் |
| 9. | அஹ்மதிய்யா சவ்க் | மஹல்லா அஹ்மதிய்யா |
| 10. | ரேத்தீ சல்லா | ரேத்தீ சல்லா |
| 11. | மஹல்லா பாபுல் அப்வாப் | மஹல்லா அர்ஜன்பூரா |
| 12. | ஹிந்து பாஸார் | லேக்ராம் பாஸார் |
| 13. | கலீ கோஜ்யா(ன்) வாலி | மஹல்லா அகால்கர் |
| 14. | அல்ஹகம் ஸ்ட்ரீட் | குருநானக் பாஸார் |
| 15. | தாருஸ் ஸிஹத் | மஹல்லா ஹரீஜன் |
| 16. | தாருஸ் ஸியா | மஹல்லா பகத்பூரா |

நிறைவுற்றது.

*(18-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

101. அஹ்மதிய்யா நூற்றாண்டு விழாத் திட்டம் குறித்து விளக்குக:


இத்திட்டம் 1973-ஆம் ஆண்டு மாநாட்டில் இத்திட்டம் குறித்து ஹஸ்ரத் மூன்றாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களால் அறிவிப்பு செய்யப்பட்டது. இதன்படி 1989 மார்ச் 23-ஆம் தேதி அஹ்மதிய்யா ஜமாஅத்தின் 100 ஆண்டுகள் நிறைவடைவதால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வளர்ச்சியை கீழ்க்கண்ட செயல்திட்டத்தின் மூலம் உறுதி செய்ய வேண்டும்:

1) அதிகமான மிஷனரி மையங்களை - பிரச்சார நிலையங்களை ஏற்படுத்த வேண்டும்.
2) உலகம் முழுவதும் 100 மொழிகளிலாவது திருக்குர்ஆனை மொழிபெயர்ப்பு செய்ய வேண்டும்.
3) உலகிலுள்ள அனைத்து முக்கிய மொழிகளிலும் இஸ்லாமிய நூல்களை வெளியிட வேண்டும்
4) பாகிஸ்தானிலும் பிற நாடுகளிலும் அச்சகங்களை நிறுவ வேண்டும்.
5) ஓர் இஸ்லாமிய ஒளிபரப்பு நிலையத்தை நிறுவ வேண்டும்.
6) பல நாடுகளுக்கிடையே உள்ள அஹ்மதி சகோதரர் -களுக்கிடையில் தொடர்பை அதிகப்படுத்தும் அளவில் பேனா நண்பர்கள் கிளப், ரேடியோ கிளப் மற்றும் தொலைதொடர்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும்.

(தொடரும்)

## 2023-ஆம் ஆண்டு யு.கே. மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் இஜ்திமா மற்றும் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா இஜ்திமாவின் இறுதி அமர்வில் ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் அன்ஸார் மற்றும் குத்தாமிடம் வாங்கிய உறுதிமொழி

**(1959-ஆம் ஆண்டு மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா இஜ்திமாவின்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இதே உறுதிமொழியை குத்தாமிடம் வாங்கினார்கள்)**





அஷ்ஹது அ(ன்)ல்லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீ(க்)கலஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸுலுஹு (3 முறை)

நாங்கள் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டு எடுத்துக் கொள்ளும் உறுதிமொழி என்னவென்றால், நாங்கள் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தைப் பரப்புவதற்காகவும், முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பெயரை உலகின் எல்லைகள் வரை சென்றடையச் செய்வதற்காகவும் எங்களது வாழ்க்கையின் இறுதி நொடி வரை முயற்சி செய்து கொண்டிருப்போம். மேலும் இந்தப் புனிதக் கடமையை நிறைவேற்றுவதற்கு எப்பொழுதும் எங்களுடைய வாழ்க்கையை இறைவன் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களுக்காக அர்ப்பணித்திருப்போம். மேலும் எல்லா மாபெரும் தியாகங்களையும் செய்து மறுமை வரை இஸ்லாத்தின் கொடியை உலகின் எல்லா நாடுகளிலும் மேலோங்கி வைப்போம்.

நாங்கள் எடுத்துக் கொள்ளும் உறுதிமொழி என்னவென்றால், கிலாஃபத் அமைப்பை பாதுகாக்கவும், மேலும் அதன் உறுதிப்பாட்டிற்காகவும் இறுதி மூச்சு வரை முயற்சி செய்து கொண்டிருப்போம். மேலும் எங்களின் சந்ததிகளின் சந்ததிகளையும் எப்பொழுதும் கிலாஃபத்தோடு தொடர்பு கொண்டிருக்குமாறும் அதன் அருட்களிலிருந்து பயனடையுமாறும் அறிவுறுத்தி வருவோம். அதன் மூலம் மறுமை வரை அஹ்மதிய்யா கிலாஃபத் பாதுகாப்பாக இருக்க வேண்டும். மேலும் மறுமை வரை அஹ்மதிய்யா இயக்கத்தின் மூலமாக இஸ்லாம் பரவிக் கொண்டிருக்க வேண்டும். மேலும் முஹம்மது (ஸல்) அவர்களின் கொடி உலகின் அனைத்து கொடிகளையும் விட உயர்வாகப் பறக்க வேண்டும்.

இறைவா! நீ எங்களுக்கு இந்த உடன்படிக்கையைப் பூர்த்தி செய்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவாயாக.

அல்லாஹும்ம ஆமீன்! அல்லாஹும்ம ஆமீன்!! அல்லாஹும்ம ஆமீன்!!!

# ஸலாம்

A.P.Y. அப்துல் காதிர்

அல்லாஹ்வின் பெயர்களுள் ஒன்று 'ஸலாம்' என்று திருக்குர்ஆன் கூறுகிறது. திருக்குர்ஆன் 59:24–வது வசனத்தில், "அவனே அல்லாஹ்; அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு இல்லை. அவன் அரசன்; தூயவன்; சாந்தியின் பிறப்பிடம்; பாதுகாப்பு அளிப்பவன்; கண்காணிப்பவன்; வல்லவன்; உடைந்த உள்ளங்களை இணைப்பவன்; மிக மேலானவன். அவர்கள் (அவனுக்கு) இணை வைக்கின்றவற்றில் இருந்து அல்லாஹ் தூயவன்" என்று அல்லாஹ்வின் திருப்பெயர்கள் கூறப்பட்டுள்ளது. அவற்றில் ஒன்று السَّلَامُ ஸலாம் சாந்தியின் பிறப்பிடம்; எனவேதான் ஆண் பிள்ளைகளுக்கு அப்துஸ் ஸலாம் என்று பெயர் சூட்டுகிறார்கள்.




இப்ராஹீம் நபியின் தந்தை, இப்ராஹீமிடம், நிச்சயமாக நான் உம்மைக் கல்லெறிந்து கொன்று விடுவேன். சிறிது காலம் வரை என் பார்வையிலிருந்து மறைந்து விடும் என்று கூறியபோது, இப்ராஹீம் நபி, 'சலாமுன் அலைக்க – உமக்கு சாந்தி உண்டாவதாக' என்று கூறியதாக திருக்குர்ஆன் (19:47–48) கூறுகிறது.

அஹ்மதி முஸ்லிம்களுக்கு ஸலாம் கூறக் கூடாது என்று கூறுபவர்களுக்கு இவ்வசனத்தில் ஒரு பாடம் உள்ளது. இவ்வாறே, நம்பிக்கை கொள்ளாத சமுதாயத்தை மன்னித்து, சாந்தி உண்டாவதாக என்று கூறுவீராக என்று திருக்குர்ஆன் (43:90) கூறுகிறது. இவ்வசனத்திலும் நம்பிக்கை கொள்ளாத சமுதாயத்துக்கு ஸலாம் கூறுங்கள் என்று கூறப்பட்டுள்ளது.

அடுத்து, சாந்தி, அமைதி என்ற பொருளில் ஸலாம் என்னும் சொல் வருகிறது. திருக்குர்ஆனில் 19:34–வது வசனத்தில், "நான் பிறந்த நாளிலும் எனக்கு சாந்தி கிடைத்தது. நான் மரணமடையும் நாளிலும், எனக்கு உயிரளித்து மீண்டும் நான் எழுப்பப்படும் நாளிலும் (எனக்கு சாந்தி கிடைக்கும்)" என்று ஈசா நபி கூறுவதாக வருகிறது.

இவ்வசனத்தில் ஈசா நபிக்கு மூன்று காலகட்டங்கள்தான் இருந்தன. அதாவது பிறந்த நாள், மரணிக்கும் நாள், உயிர்ப்பித்து எழுப்பப்படும் நாள். முஸ்லிம் சமுதாயம் நம்புவது போல், வானிற்கு உயர்த்தப்படும் நாள். அங்கிருந்து மீண்டும் உலகுக்குத் திரும்ப வரும் நாள் பற்றி கூறப்படவில்லை. காரணம், அப்படிப்பட்ட ஒரு நாளே அவருக்கு ஏற்படவில்லை என்ற நுட்பமான கருத்தை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

திருக்குர்ஆனில் 24:62–வது வசனத்தில், வீடுகளில் நுழையும்போது உங்கள் மீதே ஸலாம் கூறிக் கொள்ளுங்கள் என்று கூறப்பட்டுள்ளது. فَسَلِّمُوا عَلَىٰ أَنفُسِكُمْ இதில் உங்கள் மீதே ஸலாம் கூறிக் கொள்ளுங்கள் என்று அல்லாஹ் தெளிவாகக் கூறுகிறான். சிலர் இவ்வாறே பொருள் கொண்டுள்ளனர். ஆனால் பலர் உங்க(ள் குடும்பத்தார்க)ளின் மீது முகமன் கூறிக் கொள்ளுங்கள் என்று எழுதியுள்ளனர். இதில் அடைப்புக்குள் எழுதியிருக்கும் சொற்களை நீக்கி விட்டுப் பார்த்தால், 'உங்கள் மீது ஸலாம் கூறுங்கள்' என்று வருகிறது. எனவே இதையும் ஏற்றுக் கொள்ளலாம்.

ஆனால், நீங்கள் உங்களுக்குள் (ஒருவருக்கு மற்றொருவர்) கூறிக் கொள்ளவும் என்று கூறும்போது, 'உங்களுக்கு' என்பதற்கும் 'உங்களுக்குள்' என்பதற்கும் பொருள் வேறுபடுகிறதே! أَنفُسِكُمْ 'அன்புஸிக்கும்' எனும் திருக்குர்ஆன் சொல்லுக்கு 'உங்களுக்குள்' என்ற பொருள் உண்டா? என்ற வினா எழுகிறது. ஒரு தமிழ் மொழிபெயர்ப்பாளர், 'இல்லங்களுக்குள் நுழையும்போது ஸலாமினை உரையுங்கள்' என்று எழுதி 'உங்களுக்கு' என்பதை நீக்கி விட்டார். நம் ஜமாஅத்தோ, 'நீங்கள் வீடுகளில் நுழையும்போது உங்கள் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் ஸலாம் கூறிக் கொள்ளுங்கள்' என்று எழுதியுள்ளது.

நம் ஜமாஅத் வெளியிட்டுள்ள ஸர் ஜஃபருல்லாஹ் கான் அவர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பில் When you enter houses, salute your people என்று எழுதியுள்ளார். இதனையே மவ்லவி ஷேர் அலீ அவர்களும், மலிக் குலாம் ஃபரீத் அவர்களும் எழுதியுள்ளனர்.




24:28–வது வசனத்தில், "நம்பிக்கை கொண்டவர்களே! உங்கள் வீடுகளில் அல்லாத மற்ற வீடுகளில் அனுமதி பெற்று, அவற்றில் உள்ளவர்–களுக்கு ஸலாம் கூறாத வரை நுழையா–தீர்கள்" என்று கூறப்பட்டுள்ளது.


எனவே, எந்த வீட்டில் நுழைந்–தாலும் அந்த வீட்டாருக்கு ஸலாம் கூறும்போது அவர்கள் பதில் ஸலாம் கூறுவார்கள். அதாவது 'உங்களுக்கு ஸலாம் உண்டாவதாக' என்பதே அப்பதில் ஸலாம். இதுதான் உங்கள் மீது ஸலாம் கூறிக் கொள்ளுங்கள் என்பதன் பொருளாக எனக்குத் தோன்றுகிறது.

இரண்டாவதாக, திருக்குர்ஆனில் பல இடங்களில், ஏன் எல்லா இடங்களிலும் என்று கூறும் அளவுக்கு 'ஸலாமும் அலைக்கும்', 'ஸலாமுன் அலைக்க' என்றுதான் வருகிறது. திருக்குர்ஆன் 'ஸலாமுன் அலைக்கும்' என்று கூறும்போது, நாம் நபி (ஸல்) அவர்கள் கற்பித்தபடி 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்று கூறுகிறோம். அப்படி எனில், அந்த ஸலாம் உங்களுக்கு உண்டாகட்டும் என்பதன் பொருள் என்ன? சொர்க்கவாசி–களுக்கு இறைவன் தன் ஸலாத்தைக் கூறுவான் என்று திருக்குர்ஆன் (36:59) கூறுகிறது.

இவ்வாறே, ''வானவர்கள் சொர்க்கவாசிகளை 'ஸலாமுன் அலைக்கும்' என்று கூறி சொர்க்கத்துக் அழைப்பர்'' என்று திருக்குர்ஆன் 39:74, 16:33, 13:25, 7:47 ஆகிய வசனங்களில் வருகிறது. இதுதான் அந்த ஸலாம் என்பதன் பொருள். அதாவது, நீங்கள் சொர்க்கவாசியாக செல்லும் போது, இறைவனின் ஸலாமும் மலக்குகளின் ஸலாமும் உங்களுக்குக் கிடைக்கட்டும் என்ற பொருளில் 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்று கூறுகிறோம்.




தொழுகையில் வலப்பக்கமும் இடப்பக்கமும் ஸலாம் கூறுகிறோம். அதன் விளக்கமாவது, தொழுகை என்பது ஓர் அடியான் தன் இறைவனுடன் உரையாடும் நிகழ்ச்சியாகும். அந்த அடியான் முற்றிலும் இவ்வுலகத்தினை மறந்து, வேறொரு உலகத்தில் தன் இறைவனுடன் உரையாடுகிறான். அந்த உரையாடல் முடிந்ததும் மீண்டும் இந்த உலகுக்குத் திரும்புகிறான். திரும்பியதும் அவன் தன் வலப்புறம் ஒருவரைப் பார்க்கிறான். அவருக்குத் தன் ஸலாமைத் தெரிவிக்கிறான் பின் தன் இடப்புறம் திரும்புகிறான். அங்கிருப்பவருக்கும் தன் ஸலாத்தைத் தெரிவிக்கிறான். இதுதான் தொழுகையில் ஸலாம் கூறுவதன் காரணமாகும்.



இறுதியாக, உலகில் எல்லாரும் ஏதோ ஒரு வடிவத்தில் ஸலாம் கூறுகின்றனர். வணக்கம் என்றும், நமஸ்தே என்றும், Good Morning என்றும் கூறுகிறோம். எல்லாரும் கூறும் அந்த எல்லா வகையான ஸலாம்களும், இஸ்லாம் கூறும் அஸ்ஸலாமு அலைக்கும் என்ற ஸலாத்திற்கு ஈடாகாது. இந்த ஸலாத்தை எல்லா இடத்திலும், எல்லாருக்கும், எல்லா நேரத்திலும் கூறலாம். எனவே, நாம் 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்ற ஸலாத்தை உலகெங்கும் பரப்புவோம்.

**அஸ்ஸலாமு அலைக்கும்**

*(8-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

நமது ஜமாஅத்தில் இன்றும் எப்படிப்பட்ட பல மக்கள் இருக்கிறார்கள் என்றால், அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் (தாம்) காதியானுக்கு ஏன் வரவில்லை என்று வருத்தம் தோய்ந்த முகங்களுடன் சந்திக்கிறார்கள். அவர்கள் பகைவர்கள் தம்மிடம் பேசிய சில விஷயங்கள் காரணமாக, அவற்றைக் கேட்டு அவர்கள் காதியானுக்கு வர விரும்பாததனால், பட்டாலா அல்லது அமிர்தசரஸிலிருந்து திரும்பிச் சென்று விட்டார்கள். ஒருவேளை அவர்கள் அந்தக் காலத்தில் வந்து சேர்ந்திருந்தால், சஹாபாவைச் சேர்ந்தவர்களாக ஆகியிருப்பார்கள். பிற்காலத்தில் அல்லாஹ் அவர்களது கலப்பற்ற தன்மையைப் பார்த்து, அஹ்மதிய்யத்திலோ இணைத்து விட்டான். ஆனால், சஹாபா ஆவதை விட்டும் இழப்பிற்குரியவர்களாக ஆகி விட்டார்கள்.'' (டிசம்பர் 18, 1935 அன்று நிகழ்த்தப்பட்ட ஜுமுஆ பேருரை. வெளியீடு - குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 09, பக்கம் 391)

### ஆன்மிக பலன்கள் மற்றும் நற்கூலி

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ''பல அருளுக்குரிய நன்மைகளை உள்ளடக்கிய இந்த மாநாட்டில், பயணச் செலவுக்கான ஆற்றல் கொண்டவர்கள் அனைவரும் கண்டிப்பாக வருகை தாருங்கள். மேலும், தேவையான அளவுக்குத் தங்களது குளிர் ஆடைகள், படுக்கைகள் மற்றும் போர்வைகள் ஆகியவற்றையும் உடன் எடுத்து வாருங்கள். அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்களின் வழியில் அற்பமான தடைகளைப் பொருட்படுத்தாதீர்கள்.'' (ஆகஸ்ட் 7, 1892 அன்று வெளியிடப்பட்ட பிரசுரம். வெளியீடு - மஜ்மூஆ இஷ்த்திஹாராத் தொகுதி 1 பக்கம் 341)

### உண்மையான அருள்களுக்கு உரிமை உடையவர்களாக ஆகுதல்

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகிறார்கள்: ''உலகின் பல்வேறு நாடுகளில், ஒவ்வோர் ஆண்டும் அங்குள்ள ஜமாஅத்கள் நடத்தும் இந்த ஆண்டு மாநாடுகள், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் துவக்கி வைத்த அந்த ஆண்டு மாநாட்டைப் பின்பற்றியே ஆகும். ஜமாஅத் மக்களின் இம்மையையும் மறுமையையும் சீர்தூக்குவதற்குக் காரணமாக அமையும், அந்த உண்மையான அருள்களுக்கு ஜமாஅத் மக்களை உரியவர்களாக ஆக்குவதுதான் இதன் நோக்கமாகும்.

அவர்கள் அவற்றைத் தம்முடைய வாழ்க்கையின் நிரந்தர அங்கமாக ஆக்கி அந்த அருள்களுக்கு உரியவர்களாக ஆகிக் கொண்டே செல்ல வேண்டும். மேலும், இந்த அருள்கள் உண்மையான இறையச்சத்தைப் பெறுவதனால் கிடைக்கப் பெறுகின்றன. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜல்ஸாவில் கலந்து கொள்ளும் ஒவ்வோர் அஹ்மதியிடமும் இந்தத் தரத்தைப் பெறுவதற்கான எதிர்பார்ப்பு கொண்டார்கள். மேலும், இந்தத் தரங்களைப் பெறுவதன் பக்கம் கவனம் செலுத்தாதவர்களிடம் கடுமையான விருப்பமின்மையை வெளிப்படுத்தியுள்ளார்கள். (ஜூன் 29, 2012 அன்று நிகழ்த்தப்பட்ட ஜுமுஆ பேருரை. வெளியீடு - அல்ஃபஸல் இன்டர்நேஷனல் பத்திரிகை ஜூலை 20, 2012, பக்கம் 5)

எல்லாம் வல்ல அல்லாஹ் நம் அனைவருக்கும், அல்லாஹ்வுக்காக மட்டுமே நடத்தப்படும் இந்த ஆண்டு மாநாட்டில் இருந்து பலன் பெறுவதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக! இந்த ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றி பெறட்டுமாக! அருளுக்குரியதாக ஆகட்டுமாக! நற்பேறு பெற்ற ஆன்மாக்களின் நேர்வழிக்குக் காரணமாகத் திகழட்டுமாக! ஜல்ஸா சாலானாவிற்காக பயணம் மேற்கொள்வதற்கான எண்ணம் கொள்பவர்களை ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய துஆக்களுக்கு உரியவர்களாக ஆக்குவானாக!

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M.B. Tahir Ahmad | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam